உ
சிவமயம்

# அருள் ஒளி




மார்கழித் திருவாதிரைச் சிறப்பு மலர்

வெளியீடு
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை
இலங்கை

# அன்னையை வாழ்த்துகிறோம்
# அகவை 79 ஆவது நிறைவு விழா
# 07 – 01 – 2004



சிவத்தமிழ்ச்செல்வி
அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

---

## திரு.வை.ஈழலிங்கம்



அவுஸ்திரேலியா ஈழத்தமிழர் கழகத்தின் தலைவரும், சிட்னி முருகன் திருக்கோயில் அறங்காவலர் சபை உறுப்பினரும், அவுஸ்திரேலியா தமிழ் வானொலி நிர்வாகப் பணிப்பாளரும், கணக்காளரும், அவுஸ்திரேலியா தொழிநுட்பக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளருமான

## உயர்திரு. வை. ஈழலிங்கம் அவர்கள்

யாழ் வருகிறார்.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்த நாள் அறக்கொடை விழாவில் ஈழத்தமிழ் மாணவர் கருணை நிதியத்தை அவுஸ்திரேலியா ஈழத்தமிழர் கழகத்தின் சார்பில் வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்.



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சுபானு வருடம் மார்கழி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 17


## தானங்களில் சிறந்த தானம் சமாதானம்

இயற்கை எழில் மிக்க எங்கள் ஈழத் திருநாட்டில் நிரந்தர சமாதான வாழ்வு உருவாகவேண்டும் என்பதில் மனிதநேயம் உள்ள அனைவரும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். பௌத்த மதத்தவர்களுக்கும் இந்து மதத்தவர்களுக்கும் இடையே மத ரீதியான ஒற்றுமைகள், பண்பாடுகள் உண்டு என்பதை யாவரும் அறிவர். எமது நாட்டிலுள்ள மதங்கள் அனைத்தும் அன்பு, தர்மம், அரவணைப்பு, இரக்கம், போன்றவற்றைப் போதிக்கத் தவறவில்லை. எனினும் மதங்கள் போதித்த மாண்பினை பேணத் தவறிவிட்டோம். ஒவ்வொரு மனிதவுக்குமுரிய உரிமைகளை உணர்ந்து அவரவர் சுதந்திரமாக வாழ்வதற்கு எம்மண்ணில் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். உரிமைகள் மறுக்கப்படுகின்றபோது வேதனையின் வெளிப்பாடாக போர் நிலை தோற்றம் பெற்றது. இவ்வுண்மையை பண்புடைய ஒவ்வொரு மனிதரும் ஒப்புக்கொள்வர்.

தெய்வீக வரலாறும் இயற்கை அழகும் மிக்க எம்தேசம் சீரற்று, கதியற்று அழிந்து கொண்டிருப்பதை எந்த ஒரு பிரஜையும் ஏற்றுக்கொள்ளமாட்டார். எம் தேசத்தில் எல்லோரும் அனைத்தையும் பெற்று வாழும் சுதந்திர நாளை ஏற்படுத்த அனைவரும் முனைதல் வேண்டும். மதத்தலைவர்கள் சமாதானப் பணியில் முன்னின்று

உழைக்க வேண்டும். உலகிற்கு தர்ம உபதேசம் செய்த புத்த பகவானின் புனித சிந்தனைகளை பௌத்த மதத் தலைவாகள் தூய உள்ளத்தோடு கருத்திற் கொள்ள வேண்டும். சமாதான சக்திகளுக்கு ஊக்குவிப்பு வழங்கி உதவ வேண்டும்.அநியாயமாக மனித உயிர்கள் அழிந்து போவதை தடுத்து நிறுத்துவதற்கு ஆன்மீக வாதிகளும் அரசியல்வாதிகளும் கல்விமான்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய தருணம் இது. சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப்போகாமல் இருப்பதற்கு ஒவ்வொருவரும் உறுதுணை செய்தல் வேண்டும். பொருளாதாரத்தில், கல்வி அறிவியல் வளத்தில், மனித ஆரோக்கிய வாழ்வில் உலக அரங்கில் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் நாம் இன்று வாழ்கிறோம். இந்நிலை மாறி உலக வளர்ச்சிக்கு ஏற்ப முகங்கொடுக்ககூடிய விருத்தியை நாம் எட்டவேண்டும். போரின் அனர்த்தங்களினால் இறந்துபோன உறவுகளை நினைத்து நித்தமும் கண்ணீர் சிந்துபவர்கள் ஒருபக்கம். அங்கங்களை இழந்து அனுதினமும் அவலப்படுகின்றவர்கள் ஒருபக்கம். ஏழ்மையின் துன்பத்தில் துடிப்பவர்கள் ஒருபக்கம்.

எனவே அன்புக்கும் பண்புக்குமுரிய மனிதர்களே! எல்லோரும் இன்புற்று வாழும் இனிய சூழலை உருவாக்க அர்ப்பணிப்போடு செயற்பட முன்வாருங்கள். அனைத்து மதத் தலைவர்களும் இன்றைய வரலாற்றுப் பணியாக உள்ள சமாதானப் பணியினை முன்னெடுப்பதற்கு ஒன்று கூடுங்கள். ஒற்றுமையை வலியுறுத்தி சமாதானம் ஓங்கி ஒலிக்க துணை செய்யுங்கள். எழுத்தாளர்கள், நாவன்மை மிக்கவர்கள், விமர்சகர்கள், நிறுவன ரீதியான நிர்வாகிகள் அனைவரும் ஒப்பற்ற சமாதானத்தை உருவாக்க பாடுபடவேண்டும். இரண்டாயிரத்துமூன்றாம் ஆண்டு சமாதானச் சிந்தனைகளோடு இன்னும் சில நாட்களில் விடைபெறப் போகிறது. புதிய ஆண்டு பிறக்கின்றபோது மீண்டும் துரிதமான சமாதானமுயற்சிகள் நிச்சயமாக உருவாக அனைவரும் ஆயத்தமாக வேண்டும். உலகில் உயர்ந்த தானமாக இன்று மதிக்கப்படுகின்ற சமாதானத்தை எல்லோரும் பேண முற்படுவோமாக.

– ஆசிரியர்

**மேன்மைகொள் சைவ நீதி, விளங்குக உலகமெல்லாம்.**

# 07-01-2004 இல்
# அகவை எழுபத்தொன்பது நிறைவுபெறும்
# அன்னை சிவத்தமிழ்ச்செல்வி



அன்பும், பண்பும், அரவணைப்பும் மிக்க எங்கள் அன்னையே! உங்களை வணங்கி வாழ்த்துகிறோம். அறவாழ்வினால் எம் மண்ணை ஆற்றுப்படுத்துகின்ற அற்புதத்தாயே! உங்கள் பிறந்த நாள் தர்ம உணர்வினை ஊட்டும் திருநாள். அல்லும் பகலும் அனவரதமும் திரிகரண சுத்தியோடு எழுபத்தொன்பது ஆண்டுகள் எம்தேசத்தில் நீங்கள் சாதித்தவற்றை இரைமீட்டுப் பார்க்கின்றோம். மங்கையர்க்குத் தனியரசியாய் எம் மண்ணில் எழுந்து மாசற்ற பணிகள் பல செய்தீர்கள். உழுகுடைப் பதியிலே இலுப்பஞ்சோலையில் இருந்த துர்க்கையம்பாள் திருக்கோவிலை உலகம் வியக்கும் ஒப்பற்ற பெருங்கோயில் ஆக்கிய உவமையில்லாப் பணியினை வாழ்த்தாத வாயில்லை. ஆதரவற்று வாழவழியின்றித் தவித்த பச்சினம் சிறுமிகளைப் பாங்குடனே அரவணைத்தீர்கள். அரவணைத்த குழந்தைகளை அற்புதமாய் வளர்த்து பல்கலைக்கழகம் வரை சென்று பட்டம் பெற வைத்தீர்கள். ஊன் உறக்கமின்றி முதுமையிலும் முடிக்குரிய இந்துத் தலைமகளாக நீர் ஆற்றும் பணிகளை நீள நினைந்து உலகம் தலை வணங்கி நிற்கிறது. உலக இந்து அரங்குகளில் உங்களது நாமம் ஓங்கி ஒலிக்கிறது. ஆளுமை பற்றிச் சிந்திப்பவர்களெல்லாம் உங்களது ஆளுமையின் மேன்மையை உதாரணம் காட்டுகிறார்கள். தாயே இத்தரணியில் நீர் வாழ்வதனால் தஞ்சமென்று நாடி ஓடி வந்து ஆறுதல் பெறுகிறோம். இன்று போல் என்றும் பல்லாண்டு எம்மோடு நீங்கள் வாழ அகவை எழுபத்தொன்பது நிறைவு நாளிலே அகமலர்ந்து அன்னையை வாழ்த்துகின்றோம்.

~ அன்பர்கள்

# பாவைப்பாடலும் பள்ளி எழுச்சிப் பாடலும் பார் வாழ்வதற்குப் பாடப்பட்டவை

சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, அவர்கள்

நாடு செழிக்கவும் இல்லறம் வாய்க்கவும் நல்லாரிணக்கம் பெருகவும் பாடப்பட்டவையே திருவெம்பாவையும் திருப்பள்ளி எழுச்சியுமாகும். திருவாசகத்தில் அமைந்துள்ள பதிகங்களில் திருப்பள்ளி எழுச்சியும், திருவெம்பாவையும் அருட்சுவையோடு பொருட்சுவையும் சொற்சுவையும் மிகுந்த பாடல்களைக் கொண்டனவாகும். பள்ளி எழுச்சி என்பது துயிலெழும்புதல் என்பதாகும். மாணிக்கவாசகசுவாமிகள் பாடிய திருப்பள்ளி எழுச்சியே முதன்முதலாக எழுந்த திருப்பள்ளியெழுச்சிப் பாசுரம் ஆகும். இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. இறைவனைத் துயில் உணர்த்துகின்றோம் என்றால் அதன் பொருள் யாது? ஞானசொருபிக்கு உறக்கமும் விழிப்பும் உண்டா? எனவே ஆண்டவனைத் துயில் உணர்த்துவான்போல் நம்மை நாமே துயிலுணர்த்திக் கொள்வதாகும். திருப்பள்ளியெழுச்சியின் உட்கிடை 'திரோதான சுத்தி' எனக் குறிப்பிடப்பட்டதும் நினைக்கற்பாலது. அ∴தாவது உயிர்களின் மலமறைப்பை நீக்குதல் சங்காரகாலத்தில் ஒடுங்கிய உயிர்களுக்கு மீளவும் பக்குவம் வருதற்பொருட்டு இறைவன் ஐந்தொழில் செய்யத் தொடங்கும் அவதாரமே திருப்பள்ளியெழுச்சியாகும்.

திருவெம்பாவை என்பதும் ஆதியும் அந்தமுமில்லா எம்பெருமானின் அருட்சக்தியை வியந்து கூறப்பட்ட பாசுரம் ஆகும். மார்கழி மாதம் மதிப்புக்குரிய மாதமாகும். இறையன்பில் எம்மை ஈடுபடுத்தும் இயற்கைநிலை இம்மாதத்திற்கு உண்டு. சிவனுக்குரிய திருவாதிரைத் திருநாளும் இம்மார்கழியிலேயே வருகின்றது. திருஞானசம்பந்தப்பெருமான் பூம்பாவையை எழுப்புகின்றபோது ஆதிரைநாட் பெருமையைத் திருப்பதிகத்தில் அமைத்துப் பாடியுள்ளார். ஆதிரைக்கு முந்திய பத்து நாட்களும் நீராட்டு நாட்களே. இவை சிறப்பாகப் பெண்களுக்கேயுரியன. இல்லறத்தால் கிடைக்கூடிய இம்மை மறுமைப் பயன்களை ஆடவரும் பெண்டிரும் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கையாற் தான் பெற்றுக்கொள்ளலாம். மணவாழ்க்கைக்கு ஏற்ற நல்ல கணவன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் பெண்கள் இந்நோன்பை அனுட்டித்து இறைவனிடம் வரம்கேட்டு நிற்கின்றனர். சங்ககாலப் பாடல் ஒன்றில் தைநீராடிப் பெருவரம் பெற்ற செய்தி ஒன்று காணப்படுகிறது. ஒரு பெண் தான் விரும்பிய தலைவனை அடைவதற்காகத் "தைத்திங்கள் தண்கயம் படித்தாள்" என்பது நற்றிணைப் பாட்டு. பரிபாடலில் கதிரவன் கடுகிக் காயாத மார்கழி ஆதிரைக்கண் இறைவனுக்கு மழை வேண்டி விழா எடுத்தனர் பண்டைத்தமிழர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னே வரும் வேனில் வெப்பத்தால்

வியன் ஞாலங் கருதாது வளம்பல சுரக்க மழை வேண்டும் என்று நீராடிய செய்தியும் அப்பாடல்களில் காணப்படுகிறது.

**"ஞாயிறு காயா நளிமாரி யிற்குளத்து**
**மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை**
**விரிநூ லந்தனர் விழவு தொடங்க**
**வெம்பா தாகவியன் நிலவரைப்பென**
**அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்**
**முனித்துறை முதல்வியர் முறைமை காட்டத்**
**தாயொடு நின்று தைநீராடுதல்"** என்பதே அப்பாடலாகும்.

பிற்காலத்தில் இதுதான் மார்கழி நீராடல் எனப்பட்டது. தைநீராடல் எனவும் சில இடங்களில் குறிப்பிடப்படுகிறது. அதிகாலையில் நீராடுவதனால் பனி, குளிர் ஆகிய தாக்கத்தினால் ஏற்படும் நோயிலிருந்து சுகமடையலாம் என்பது முன்னோர் நம்பிக்கை. தேள்கொட்டினால் அவ்விசத்தைப் போக்கத் தண்ணீரில் குளித்து சிறிது நேரம் அத்தண்ணீரிலியே இருக்கும் பழக்கம் இன்றும் உண்டு. சூரிய உதயத்துக்கு முன்பு தண்ணீரில் மின்னாற்றல் அதிகமுண்டு. எனவே சூரியன் உதிக்க ஒருமணி நேரத்துக்கு முன்பே நீராடவேண்டும் என்பதை 'சீதப்புனலாடி' என்ற வரி புலப்படுத்துகின்றது.

மேலும் அடியாரிணக்கம் என்பது வாழ்வை உயர்த்துவது என்பதையும் பாவைப் பாடல்களில் காண்கிறோம். 'உன்னைப் பிரானாக்கப் பெற்ற உன் சீரடியோம் உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம் கணவர் ஆவார்' என்பதால் சமய வாழ்வில் ஒத்த கருத்துள்ள குடும்பங்கள் நம் நாட்டில் நிலைபெற வேண்டும் என்று அடிகள் விரும்பினார். பெண்கள் எல்லோரும் மார்கழித் திங்களில் வெள்ளியெழ முன்னெழுந்து வீடுவாசல் பெருக்கி மற்றவரையும் அழைத்துக் குளித்து தூய உள்ளத்தோடு வழிபாடாற்றுவார். ஊர் வம்பு பேசார். ஆண்டாள் பெருமாட்டி 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்' என்று அழகாகப் பாடியுள்ளார்.

திருவண்ணாமலையில் அடிகள் தங்கியிருந்த காலத்தில் பெண்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி ஏதோ நாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டு செல்வதைக்கண்ட மணிவாசகர் உள்ளத்தில் ஞானக்காட்சி பரிணமித்து அவையே பாவைப் பாட்டாக வெளிவந்தது.

பெண்கள் எல்லோரும் கூடிநின்று 'உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று குரல் எழுப்பி தமது கோரிக்கையை முன்வைக்கிறார்கள். இறைவா நாங்கள் உனது அடைக்கலம் எங்களுக்கு நீயே துணை. உனது அடியார்களே எமது கணவர்களாக வேண்டும். எமது கைகள் உமக்கே பணி செய்யவேண்டும். இந்தவரம் கிடைத்தால் உளநிறைவோடு வாழ்வோம் என்பது அவர்களின் வேண்டுகோள். இதனால் இறைவனை முன்னிட்டு நடத்தும் இல்லறம் நல்லறமாகும் என்ற நம்பிக்கை தொனிக்கிறது. பாவைப்பாடல்களும் பள்ளிஎழுச்சிப்பாடல்களும் அம்பலவாணனின் அருட்புகழையே எடுத்துக்காட்டுகிறது. சிற்றம்பலம் என்பதும் சிவலோகம் என்பதும் பல இடங்களில் பயிலக் கிடக்கிறது. எனவே நாடு வாழவும் வீடு சிறக்கவும் மேற்கொள்ளப்பட்ட பாவை நோன்பு நாட்களை புண்ணிய நாட்களாகக் கொண்டு வாழ்வோமாக.

## எங்கு வழிபடலாம்

ஸ்ரீராம கிருஷ்ணர் சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டு இருக்கும்போது ஒரு சீடன் சுவாமி கடவுளை வழிபட கோயிலுக்குத்தான் போக வேண்டுமா? நம் வீட்டிலே இருந்தபடியே தெய்வங்களை வழிபடலாமே எதற்கு கோயிலுக்குப் போக வேண்டும் என்றான்.

அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் "உன் கேள்விக்குச் சிறிது நேரம் கழித்து பதில் சொல்கிறேன்" என்று சொல்லி சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டு இருந்தார்.

சிறிது நேரம் கழித்து அந்தச் சீடனை அழைத்து "குடிக்கத் தண்ணீர் கொண்டுவா" என்றார். சீடன் ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க ஸ்ரீராமகிருஷ்ணர் "நான் உன்னிடம் தண்ணீர் கேட்டேன் நீ செம்பில் கொண்டுவந்துள்ளாயே" என்றார்.

"சுவாமி தண்ணீரை கையில் கொண்டு வந்தால் ஒழுகிப் போய்விடுமே" என்பதால் தான் செம்பில் கொண்டு வந்தேன் என்றான்.

உடனே ஸ்ரீராமகிருஷ்ணர் மனம் தான் கோயில். அதனால் வீட்டில் இருந்து மனதைக் கட்டுப்படுத்தி கடவுளை எவ்வளவு நேரம் வழிபட்டாலும், கையில் தண்ணீர் ஒழுகுவது போல் மனம் திடீர் என்று சூழ்நிலை காரணமாக சிதைந்து விடும். அமைதியான, பொதுவான தலங்களில் சென்று தெய்வங்களை வழிபடும்போது மனம் ஒருநிலைப்படுத்தப்படுகிறது. அதனால் மனம் சுத்தமாகிறது மனிதனுக்கு தெளிவும் கிடைக்கிறது என்றார்.

**நன்றி** (பக்தி மலர்)

**கிருஷ்ணசாமி ஜமுனாதேவி**
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

# திருவாதவூரடிகள் புராணம் - ஒரு சிந்தனை

சிவ. சண்முகவடிவேல், அவர்கள்

மணிவாசகப் பெருமானுடைய திவ்ய சரிதத்தையும் அடிகளாரால் அருளிச்செய்யப் பெற்ற திருவாசகம் திருக்கோவையார் என வழங்கும் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் பனுவல்கள் பாடப் பெற்ற சந்தர்ப்பங்களையும், வாதவூர் வள்ளலார் சிவபெருமானுடைய திருவடியை எய்தியமையும் எடுத்து இயம்புவது திருவாதவூரடிகள் புராணம்.

கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தைப் பாடியருளினார். கடவுள் மாமுனிவர் என்னும் திருப்பெயர் அவர் ஒரு சீவன்முத்தராகவோ, திருவடி மறவாச் சிந்தனையாளராகவோ இருந்திருக்கலாம் என்ற நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது.

திருவாதவூரடிகள் புராணம் மொத்தம் ஐந்நூற்று நாற்பத்தாறு நற்பாடல்களைக் கொண்டது.

பாயிரம் தவிர ஏழு சருக்கங்களால் நடப்பது திருவாதவூரடிகள் புராணம்:

மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக்கம், திருவெம்பாவைச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம், என்பதுவே ஏழு சருக்கங்களின் மகுடமாகும்.

திருவாதவூரடிகள் புராணக் காப்புச் செய்யுள், "பவளமால் வரையி னிலவெறிப் பதுபோல்" எனத்தொடங்கும். 'கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த, கடவுளை நினைந்து கைதொழுவாம்' என நிறைவு பெறுவதால் விநாயகக் கடவுள் மீது பாடப் பெற்றது என்பது புலனாகும்.

மணிவாசகருக்குப் பெற்றோர் சூட்டிய திருநாமம் திருவாதவூரர் என்பதாகும். அது 'திருவாத வூரரெனுந் திருநாமந் தரித்தார்கள்' என்று புராணம் புலப்படுத்தும்.

திருவாதவூரரின் தந்தையார் சம்புபாதாசிரியர். தாயார் சிவஞானவதியார். அவர்கள் ஊர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூர்.

சுப்பிரமணியக் கடவுள் அகத்திய முனிவருக்கு இந்திரன் பழி தீர்த்த திருவிளையாடல் முதல் வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த திருவிளையாடல் ஈறாகச் சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்துநான்கு ஆடல்களைத் திருவாய் மலர்ந்தருளினார். அவை ஆலாசிய மான்மியம் என்னும் சமுத்திரதுள. அவற்றுள் நரிப்பரிசுகளை அரிமர்த்த பாண்டிய மன்னது பிறவித் துன்பம் நீங்கக் கொடுத்தருளினார். அத்திருவிளையாடலைக் கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணமாகப் பாடினார். திருவாதவூரடிகள் பிறவி நீங்கிய சரிதத்தை நாமும் பாடுவதனால் பிறவித் துன்பம் நீங்கலாம்.

திருவாதவூரடிகள் புராணத்தை அன்பு கூர்ந்து படிப்பவர் பயன் விரிப்பவர், செவிப்புலன் வழியாகக் கேட்பவர் மனத்தில் சிந்திப்பவர் யாவரும் இம்மையில் மனம் மகிழப் பூமியைப் பாதுகாப்பர். மறுமையில் சிவலோகத்தில் சிவசந்நிதியில் வாழப் பெறுவர் என்பது நூற்பயன்.

மந்திரிச் சருக்கத்தில் திருவாதவூரருடைய திருவவதாரமும், அரிமர்த்தன பாண்டிய மன்னன் வாதவூரரை முதன் மந்திரியாக்கிக் கொண்டமையும், வாதவூரர் சற்குரு தேடலும், விலைப் பொருட்டுக் குதிரை வாங்கப் பெருந் தொகைப் பணத்துடன் சோழ நாட்டிற்குச் சென்றதும் பேசப்படும்.

திருப்பெருந்துறைச் சருக்கத்தில் கயிலாய நாதர் திருவாதவூரரைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டமையும், ஆவணி மாசத்தில் மூல நட்சத்திரம் செறி தினத்தில் மதுராபுரிக்குக் குதிரைகள் வரும் என்று வாக்குக் கொடுத்து வாதவூரரை அரிமர்த்தன பாண்டியனிடத்தில் அனுப்பி வைத்தமையும் அறையப்படும்.

குதிரையிட்ட சருக்கத்தில் மன்னனிடத்தில் குதிரைகளைக் கயிறு மாறிக் கொடுத்ததும் இராக்காலத்தில் பரிகள் நரிகளானதும் அரசன் மந்திரியாரிடத்தில் குதிரை வாங்கக் கொடுத்த தனத்தைக் குறைவற வாங்கத் தண்டலாளரிடத்தில் தண்டிக்கப் பணித்ததும் அமையும்.

மண்சுமந்த சருக்கத்தில் வந்தியம்மைக்குச் சோமசுந்தரப் பெருமான் கூலியாளராக மண் சுமந்து அடிபட்டதும், மணிவாசகனார் மன்னனிடத்தில் மந்திரிப் பதவியை ஒப்படைத்து திருப்பெருந்துறையை நாடிப் பரமாசரியரைத் தேடிச் சென்ற செய்தியும் செப்பப்படும்.

திருவம்பலச் சருக்கத்தில், பரமாசாரியர், திருவாதவூரர் இனிமேல் செய்ய வேண்டியவற்றைப் பணித்துக் கற்றையஞ் சடையார் நின்று கண்ணருள் செய்து சென்றதும், வெண்பிறை முடித்த வேணி விண்ணவர் அன்பிலாத பண்பின ரெனினுந் தம்மைப் பாடினர்க்கு இரங்குவாரென்று எண்பெறு நமச்சி வாய வாழ்கவென் றெடுத்து ஞான வாசகம் பாடியமையும் தில்லையின் எல்லையில் பர்ணசாலை அமைத்து அமர்ந்ததும் அறையப்படும்.

புத்தரை வாதில் வென்ற சருக்கத்தில் தில்லைச் சிதம்பரத்தில் சமய வாதம் நிகழ்த்திப் புத்த சமயத்தவரை வாதில் வென்றமையும், ஈழநாட்டு அரசனுடைய மகளான அரசிளங்குமாரியைப் பேச வைத்ததும், சமயவாதத்தில் தோற்ற புத்த மதத்தவர்களைச் சைவர்களாக்கிப் புத்தடியார்கள் ஆக்கிய புதுமையும் புகலப்படும்.

திருவடி பெற்ற சருக்கத்தில், சிதம்பரநாதர் மானுட மறையவராக மறைந்து எழுந்தருளி வந்து மணிவாசகர் திருவாசகம் பாட ஏட்டில் எழுதியமையும், பின்னர் கோவை பாடக் கேட்டு ஏட்டில் தீட்டியமையும், திருவாதவூரரிடத்தில் தில்லை உள்ளார் பொருள் கேட்பச் சபாநாயகரைக் கைகாட்டித் தம்முருவம் காட்டாமல் மறைந்தவரைப்

பைகாட்டும் பேரரவர் பணியுடையார் தமக்கன்பு மெய்காட்டிப் பாலுடன் மேவியநீ ராக்கியமையும் மொழியப்படும். இவ்வாறு-

"முக்கனொடு நான்குபுல வைந்துமுக முன்னோன்
சொக்கனரு ணன்மைபெறு தொன்மைதிகழ் நன்கு
டக்கடு விடத்தையர னுக்கருள்வ தென்றே
மைக்கடலின் வைகலொழி வைகைவள நாடு"

என்று மந்திரிச் சருக்கம் தொடங்கும்.

அண்டனை யண்டர் கோனை
யன்பின ரடையு மாறு
கண்டனர் புளக மெய்திக்
கம்பித மாகி நின்று
விண்டனர் கசிந்து சிந்தை
வேர்த்தனர் மேனி யெங்கும்
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை
குவித்தனர் தில்லை யுள்ளார்.

என்னும் திருவடி பெற்ற சருக்கச் செய்யுளோடு நிறைவு பெறுவது திருவாதவூரடிகள் புராணம்.

ஏனைய புராணங்களில் காண முடியாத தனிச் சிறப்புத் திருவாதவூரடிகள் புராணத்திற்கு உண்டு. அது இதுவாகும்.

"காவிய காப்பியத்திற்கு இசைவான சிருங்காரம் முதலிய உலகியல் சுவைகள் அமையப் பெறாதது திருவாதவூரடிகள் புராணம். மற்றைய புராணங்களைக் கற்கப் புகுவதற்கு ஒரு வழிகாட்டியாக விளங்குவது இப்புராணம்.

சிவாகமத்தில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பதங்களை மிக இலகுவில் எவரும் உணரத்தக்க வகையில் உரைப்பது. ஞான மார்க்கத்தில் நின்ற ஞானாசாரியருடைய நற்சரிதத்தை தேனினும் இனிய செந்தமிழ் பாக்களால் பகர்வது. பத்தியை வளர்ப்பது பரமனிடத்தில் உள்ளத்தைப் பதியச் செய்யவல்லது. கேட்போர் படிப்போர் நெஞ்சங்களை ஒரு நிலைப் படுத்தி உருக்கும் தகையது. சிவ சின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து வியந்து போற்றப்படுவன. சைவ சித்தாந்த நன்னெறியில் நின்று சிவ அன்பில் மக்களை ஆளாக்கும் அரும்பெரும் திருவருள் செறிவில் திருவாதவூரடிகள் புராணம் திகழும்.

சைவப் பெரு மக்கள் சேர்ந்து வாழும் தேசங்கள் தோறும் திருவாதவூரடிகள் புராணம் ஓதியும் பொருள் உரைக்கும் பெருமைக்குரியது.

(அடுத்த இதழில் தொடரும்)

# கோயில் திருப்பதிகம்

**பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள்**

கோயில் தில்லைச்சிற்றம்பலம். இப்பதிகமும் தில்லையில் அருளப்பட்டது என்ப. பதிகம் பத்துப் பாடல்களைக்கொண்டதோர் பகுதி. அது தெய்வீகத்தை உணர்த்தும் திரு என்னும் அடையுடன் சேர்ந்து திருப்பதிகம் என்று நின்றது. அந்த அமைப்புடன் கோயில் என்னும் தில்லையைக் குறியீடு செய்யும் சொல்லுஞ் சேர்ந்து கோயில் திருப்பதிகம் என்றாகியது. திருப்பெருந்துறையிற் குருவடிவாகி வந்த பொன்னம்பலவனைத் தில்லையில் நின்று நினைந்து பாடிய பாடற்பகுதி இது.

"தில்லையிற் பாடப்பட்டமையாற் கோயில் திருப்பதிகம் என்றாகியது"என்பர் திருக்குறள்வேள் ஜி. வரதராஜன் அவர்கள்.

கோயில் திருப்பதிகம் என்பது அடிகள் திருப்பெருந்துறையானை அழைத்து முறையிடும் பத்துத் திருப்பாடல்களைக் கொண்ட பகுதி என்க. மூத்த கோயில் என்பது தில்லைப்பதியையும் கோயில் என்பது திருப்பெருந்துறையையும் குறித்தன என்க. கோயில் மூத்த திருப்பதிகத்தானே பொன்னம்பலத்தானை வேண்டி முறையிட்ட அடிகள் அவன் வந்தருளாமையின், தில்லைக்கு வருகவென ஆணையிட்ட பெருந்துறையானை அழைத்து விண்ணப்பித்தருளுவாராயினர் என்க. இப்பதிகத்திற் பெருந்துறையே பண்ணிப் பண்ணிப் பேசப்படுதலின் கோயில் என்பது திருப்பெருந்துறையையே குறிக்கும் என்பது தெளிவு என்று பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள் குறிப்பிடுவர்.

"கோயில் எனப்படும் தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய கூத்தப்பெருமானைத் திருப்பெருந்துறையில் தமக்கு அருள்செய்த ஞானாசிரியத் திருவுருவாகக் கண்ட அடிகள் தில்லைத் திருச்சிற்றம்பலப் பெருமானைத் திருப்பெருந்துறையுறை சிவனே எனவே அழைத்து முன்னிலைப்படுத்தி இப்பதிகத்தினை அருளிச் செய்வாராயினர்" என்று சங்கநூற் செல்வர் பண்டிதமணி சு. அருளம்பலவனார் எழுதியுள்ளார்.

"மூத்த திருப்பதிகம் என்பது சிறந்த திருப்பதிகம். சிறப்பு என்பது பொருள் உண்மை என்றாகும்" என்பது சித்தாந்த பண்டிதர் ப. இராமநாதபிள்ளை குறியீடு,

"மூத்த திருப்பதிகம் என்றமையால் முதலில் அருளப்பட்டது" என்பது தருமை ஆதீனப்புலவர் சி. அருணைவடிவேல் குறிப்பு.

"மூத்ததிருப்பதிகம் என்பதனுள் மூப்பு என்பது உயர்வைக் குறிக்கும்" என்பர் மாதவச் சிவஞான யோகிகள். சிவஞானசித்தியார் 2ஆம் சூத்திர உரை. அந்தாதித் தொடையானியன்ற இப்பதிகம் எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பத்தினைக்

கொண்டது. இப்பதிகத்தின் உள்ளார்ந்த பொருள் அனுபோக இலக்கணம் என்பதாகத் திருவாசகத் திருவுள்ளக்கிடை குறிப்பிடும். சிவபெருமானை அனுபவ வாயிலாக அறிவதொரு அறிகுறி என்பது அது. "அடிகளது அனுபவம் இனிது விளங்கி நிற்றலின் இதற்கு அனுபோக இலக்கணம் எனக்குறிப்புரைத்தார்'' என்பார் தருமை ஆதீனப்புலவர் அருணைவடிவேல் முதலியார் அவர்கள்.

இப்பதிகத்திலுள்ள திருப்பாடல்கள் குறிப்பிடுவன:

தெளிந்த தேன்போன்ற இனியனே, சிவபெருமானே, திருப்பெருந்துறையில் உறைபவனே, ஈறில்லாத பதவிகள் எல்லாவற்றையும் கடந்த ஆனந்தமானவனே, என்னைப் பகைத்து என் அறிவை மயங்கச் செய்யும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்களின் வாயில்களை அடைத்து அமுதமாய்ச் சுரந்து நின்று என்னுள்ளத்துத் தோன்றுகின்ற உயர்வாகிய ஒளியே, உன்னை உள்ளவாறு காணும்படியாக வந்தருள்வாயாக.

எல்லாவற்றுக்கும் முன்னுமாய்ப் பின்னுமாய், முழுதுமாய்ப் பரந்துள்ளவனும் இயல்பாகவே மலநீக்கத்திற்கு உரியவனுமாயவனே,எல்லையற்ற முதல்வனே, அழகிய திருப்பெருந்துறையில் உறைபவனே. சிவபெருமானே சிறப்புப் பொருந்திய சிவபுரத்து மன்னனே, அன்பின் மிகுதி காரணமாக அடியனாகிய எனது உயிரும் உடம்பும் இன்பானுபவங்களெனக் கசிந்துருக, எனக்குப் பொருத்தமில்லாத நல்லருளை நீ கொடுத்தாய் யானுனக்குச் செய்யக்கூடிய பதிலுதவி எதுவுமில்லாதவனாகி இருக்கின்றேன். அன்பர்க்கு அரசனே, அடியனாகிய என்னுடைய தந்தையே உயிருமுடம்பும் மயிர்க்கால்கள் தோறும் நெகிழ்ச்சியுண்டாகும்படி என் உள்ளத்தே புகுந்து உருகச் செய்து அஞ்ஞானத்தைப் போக்கிய மெய்யொளியே திரையின்றி நிலையாவுள்ள அமுதமாகிய தெளிந்த கடலே, திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானே, வாக்கும் மனமுங் கடந்து நின்று திருவருளால் உணரும்படியான உணர்வுப் பொருளானவனே, யானுன்னைப் புனைந்து கூறும் முறைமையை எனக்கு அறிவுறுத்துவாயாக.

ஞானியராகிய பெரிய முனிவர்களும் தேவர்களும் ஏனைய பெரியவர்களும் ஆகிய எல்லோருடைய அறிவினாலும் அறிதற்கரிய மேலானவனே, ஒப்பிலாதவனே எல்லா உயிர்கட்கும் உயிரானவனே, என் பிறவியை நீக்கவல்ல அமுதம் போன்றவனே, உயிரை இறுக்கிப் பிணித்துள்ள ஆணவ இருளில் நீங்கித் தெளிவாய்க் காணப்பட்ட தூய ஒளிமயமானவனே திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானே, முக்குண வசமாகாத பேரானந்தமே, உன்னை அடைந்துவிட்டேன். எனக்கு இனி என்ன குறையிருக்கமுடியும்!

எந்தவொரு வகையாகவும் குறைவென்பதில்லாத பூரணமானவனே, மாசற்ற அருமருந்தே, இறுவாயில்லாத செழுமை பொருந்திய சுடர்க்குன்றே, என்மனத்தினுள்ளே வேதமாகவும் வேதப் பொருளாகவும் சுடரும் நிலை பெற்றவனே அணையில்லாத வெள்ளம் போல என் உள்ளத்தின்கண் பாய்கின்ற திருப்பெருந்துறையில் உறைகின்ற

சிவபெருமானே, தலைவனே, நீ என் உடலை இடமாகக் கொண்டுவிட்டாய்: இனி யான் உன்னிடம் எதையும் வேண்ட வேண்டியதில்லை.

உன் திருவருளை வேண்டி எனதுள்ளம் உருகும்போது அங்கே தோன்றுகின்ற ஒளியுருவே, தேவர்கள் தலையில் விளக்கம் பெறும் தாமரை மலர் போன்ற செவ்விய பாதாரவிந்தங்களை உடையவனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே, வரிசையாயுள்ள வெளி, நீர், நிலம், தீ காற்று என்பனவாயும் அவற்றின் வேறாகியும் ஆங்கே அருளாலன்றிக் காணப்படாத வடிவை உடையவனாயும் இருப்பவனே, உன்னைக் கண்ணாரக் கண்டு களித்தனன். இன்று எனக்குத் திருவருளைத் தந்து, அறியாமையை அகற்றி உள்ளத்துள்ளே எழுகின்ற கதிரவனைப் போன்று தோற்றி நின்ற உனது நிலையைச் சுட்டி அறியாது, உணர்வது நீயல்லாது வேறொன்றுமில்லை என்னும்படி எல்லாவற்றுளும் கலந்து நுண்ணிதாகக் குறுகிக் குறுகி ஒரே தன்மையாய் வியாபகமாகித் திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே, காணப்படும் பொருள் எதுவந் நீயல்லை. எந்தவொரு பொருளும் இருக்கமுடியாது உன்னை அறிய வல்லவர் யார்?

பூமி, மேலுள்ள பதவியாகிய புவனங்கள் அனைத்துமாகி உலகப்பொருள்கள் அனைத்திலுமாகி வந்ததோர் ஒப்பற்ற பேரறிவின் விரிவே, நீரிலுள்ள தீ போன்றவனே, மனத்தால் நினைத்தற்கரிய குற்றமற்றவனே உன்னுடைய திருவருள் வெள்ளத்து செம்மை பொருந்திய மனத்துத் தோன்றுகின்ற இனியனே! திருப்பெருந்துறையுறை சிவனே, எனக்கு நீயல்லாது இங்கு உறவினர் யார்? அயலுள்ளோர் யார்?

எனக்குப் பேரின்பத்தைச் செய்கின்ற சோதிவடிவானவனே, ஒளி உருவானவனே, அருவமானவனே, சொற்களினால் விளக்கம் செய்ய முடியாதவனே, எந்தப் பொருட்கும் தொடக்கம், இடை, முடிபு என்றானவனே பாசப்பிணிப்பை இல்லாமற் செய்கின்ற பேரின்பக் கடல் போன்றவனே, குற்றமற்ற நன்மையைச் செய்கின்ற திருவருள் மலையே, திருப்பெருந்துறையுறை சிவபெருமானே, நீ குருவாகி வந்து உன் திருவடிகள் இரண்டையும் திருப்பெருந்துறையில் அருளிய பின் உன் போக்கு என்ன வகையினது என்று விளகவில்லையே! அதை விளங்க வைப்பாயாக.

என் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கின்ற தலைவனே, திருப்பெருந்துறையுறை சிவனே, உன்னை எனக்குக் கொடுத்து என்னைப் பெற்றுக்கொண்டாய். சங்கரா, எங்கள் இருவரில் யார் திறமை சாலி? முடிபேயில்லாத பேரின்பம் எனக்குக் கிடைத்தது. நீ என்னிடம் என்னத்தைப் பெற்றுக் கொண்டாய்? எந்தையே இறைவ, என்னுடலைக் கோயிலாகக் கொண்டாய். இந்த உனது அருட்செயலுக்கு யான் செய்யக்கூடிய கைமாறுதான் என்ன; எதுவுமில்லையே!

# சைவ வாழ்வில் அநுட்டானம்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

சைவ அநுட்டானங்கள், தற்காலத்தில் பெரும்பாலும் சைவமக்களால் கைவிடப்பட்டு வருகின்றன. அவற்றைக் கைக்கொள்வதற்கு, இந்த அவசர உலகத்தில் அவகாசம் இல்லை என்று வேறு காரணமும் கற்பிக்கப்படுகிறது. அவகாசம் நம்மைத் தேடி வராது. நாம் தான் அதைத் தேடி அடையவேண்டும். எல்லா வேலைகளுக்கு மத்தியிலும், சைவ அநுட்டானங்களுக்கும் சிறிது நேரத்தை ஒவ்வொருநாளும் ஒதுக்கத்தான் வேண்டும். எதையும் மறவாதவர்களும், சைவ அநுட்டானங்களை மறந்து போதல் என்பது தற்காலத்தில் சர்வ சாதாரணமாகி விட்டது. சமயம், சமய அநுட்டானங்கள் என்பன அத்துணை முக்கியமானவையல்ல என்று இக்காலத்தவர் கருதுகிறார்கள் போலும்.

சமயத்தையும், சமய அநுட்டானங்களையும், சமய விழுமியங்களையும் கீழ்மைப்படுத்துவதால் ஏற்படும் தீமைகள், தீயவிளைவுகள், பற்றி இவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. முழுக்க முழுக்க உலகியல் விவகாரங்களில் மூழ்கி, ஆன்மிகத்தை அந்நியப்படுத்தும் போது மக்களிடையே நிம்மதியும் அமைதியும் குலைகின்றன: வன்செயல்களும் வன்முறைகளும் தலைதூக்குகின்றன. மனித வாழ்க்கை; மிருக வாழ்க்கையாக மாறிவிடுகிறது.

பயிரைக் காப்பதற்கு வேலி இருப்பது போல, மனித வாழ்க்கையைக் காப்பது ஆன்மிகம், ஆன்மிகத்தை வளர்க்க உறுதுணையாகவுள்ளது, சமயம். இறைவழிபாட்டினாலும், திருநீறு முதலிய சிவசின்னங்களைத் தரிப்பதாலும், விரதங்களை அநுட்டிப்பதாலும், திருவைந்தெழுத்தை ஓதுவதாலும், சிவனடியார்களின் வரலாறுகளை வாசிப்பதாலும், திருமுறைப் பாடல்களை ஓதுவதாலும், எமது பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு விடுகிறது. இகபர சுகங்களும் கிட்டுகின்றன. சமயம், வாழ்வின் கவசம் என்பதை மறுத்தலாகாது.

சமயம் என்பது வெறுமனே அறிவோடும் போதனையுடனும் சம்பந்தப்பட்டதன்று. சமயம் ஆன்மாவுடனும், சாதனை மற்றும் அநுட்டானங்களுடனும் சம்பந்தப்பட்டது. நான் இந்த உடம்பு அன்று: நான் ஆன்மா என்பதை எமக்கு உணர்த்துவது சமயம். சமயத்தோடு தொடர்பில்லாதவர்களே ஆசையினால் உந்தப்பட்டு அல்லற்படுகிறார்கள். ஆன்மாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், உடம்பின் தேவைகளையும் ஆசைகளையும் பூர்த்தி செய்யவே முற்படுகிறார்கள். சைவப்பயிற்சிகள், அநுட்டானங்கள் என்பவற்றினாலேயே இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும்.

மனிதப்பிறவி கிடைத்தல் அரிது. புண்ணிய வசத்தினால் மனிதப்பிறவியெடுத்த ஆன்மா மேற்கொள்ள வேண்டிய பிரதான சைவப்பயிற்சிகளும் அநுட்டானங்களும் பின்வருமாறு அமைகின்றன. அவையாவன, விரத அநுட்டானம், விபூதி தரித்தல்,

திருவைந்தெழுத்து ஓதுதல், சிவாலய வழிபாடு, திருவுருவ வழிபாடு, திருமுறையோதல், சமய சமூகத் தொண்டுகள், முதலியனவாம். இவற்றைக் கிரமமாக மேற்கொண்டு வருதல் சைவர்கள் ஒவ்வொருவரினதும் சமயக் கடமையாகும்.

சமயம் என்ற சொல் நன்றாகச் செய்யப்பட்டது என்னும் பொருளை உடைத்தது. சமய அநுட்டானம் அதன் செயல்வடிவமாகும். அநுட்டானம் இல்லாத சமயம், சமய மாகாது. சைவ அநுட்டானங்களில்லாத சைவர்கள், சைவர்களாகப் பிறந்திருந்தாலுங் கூட, சைவர்கள் ஆகமாட்டார்கள்.

சைவ அநுட்டானங்களில் ஈடுபட்டு, இறைவனின் திருவருளை நாம் சிந்திப்போமாயின் எமக்கு, "இன்பமே, எந்நாளும் துன்பமில்லை" என்னும் உயரிய வாழ்க்கை நிலையை எய்தப் பெறுவோம்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்;"

## மார்கழியின் மகிமையினைப் பாடுமனமே

**எடுப்பு**

அருளொளி நலம்தர ஆடிடும் எம்பிரான்
திருவருள் (தரும்) பெறும் தினமே

**தொடுப்பு**

இருள்கெட உள்ளத் துவகையில் நீந்திட
வருவினை கெடும் தினமே

**முடிப்பு**

மார்கழி என்றதும் மனங்குளிரும்
மாதுமை நாயகன் நினைவொளிரும்
சீர்திரு வாசகப் பண்ணொளிரும் எங்கள்
சிந்தையில் சிவனருள் ஊற்றெடுக்கும்
ஊர்தொறும் உதயத்தின் முன்னெழுந்தே
உலாவரும் கன்னியர் நெஞ்சத்திலே
சேர்ந்திடும் காதல் காட்சியிலே தினம்
பாடிடும் திருவெம் பாமணக்கும்
முற்றம் பெருக்கியே கோலமிட்டு
முழுமையும் அவனருள் ஒளிவிளங்க
குற்றம் நீக்கியே கணபதியின் அருள்
திருவடி தொழும்தினம் மார்கழியே.

பா ஆக்கம்: சு. குகதேவன், தெல்லிப்பழை.

# பண்ணிசையின் சிறப்பும் பெருமையும்

**செல்வி. சந்திரிக்கா கணேஸ்பரன், அவர்கள்**
ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

இசை இறைவன் வடிவமாகும். கலைகள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றியவை. மேலும் இறைவனை அடைவதற்கு ஏற்ற சிறந்த சாதனமும் இசையேயாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என இறைவனை விளிக்கின்றார். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும் "நாதத்தையே சரீரமாக உடையவன் இறைவன்" என தமது கிருதியில் குறிப்பிடுவதோடு சப்த ஸ்வரங்களும் இறைவனின் ஐந்து முகங்களிலிருந்தும் பிறந்தன எனவும் குறிப்பிடுகின்றார். இசைக்கு காந்தர்வ வேதம் எனவும் பெயருண்டு. காந்தர்வ வேதம் நான்கு உபவேதங்களில் ஒன்று. சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப்பது, இசைக்கலையின் தெய்வீகத் தன்மையைப் புலப்படுத்துகின்றது.

இத்துணைச் சிறப்புள்ள இசைக்கலையை மனிதன் தனது அறிவினாலும், புத்தி சாதுர்யத்தினாலும் இன்று கால வரை வளர்த்து வந்திருக்கின்றான். அக்கால பண்பட்ட சமுதாயத்திலிருந்து எழுந்தவையே பண் இசை வடிவங்கள். மூங்கிற்கழியினிடத்திலிருந்து வந்த இசையை உணர்ந்த மனிதன் நாளடைவில் அதனையே ஒரு வாத்தியமாக அமைத்தான். அவ்வாத்தியமே இன்று வழங்கும் புல்லாங்குழல் வாத்தியமாகும். இது ஓர் இயற்கை வாத்தியமாக விளங்குகிறது. குழலும் யாழும் சங்க காலத்தே சிறப்புற்றிருந்தமையை சங்கப் பாட்டால் அறியக் காணலாம். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் இவ்விரு வாத்தியங்களையும் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாகும். இன்று வெளிநாடுகளில் இசையைப் பற்றி ஆராய்ச்சி செய்து இசை மூலம் நோய்கள் தீருவதையும் பயிர்கள் வளர்வதையும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் மிகப் பழங்காலத்தில் இருந்தே இராக முறையைப் பண்முறை என்றும் இராகங்களைப் பண் என்றும் அழைத்து வந்திருக்கின்றார்கள். தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய்வோமாகில் தேவாரப் பாசுரங்கள் தோன்றிய காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்கள் என்று அழைக்கப்பெற்ற இராகங்கள் தமிழ் நாட்டில் வளர்ந்து வந்தமையை அறியலாம். சங்கீத மும்மூர்த்திகள் முதலான இசை மேதைகள் தமிழகத்தில் மரபு வழியாக வழங்கி வந்த இராக இசை மரபைக் கையாண்டே தங்கள் கிருதிகளை அமைத்துச் சங்கீத உலகிற்கு வழங்கினர். தேவாரப் பாடல்களும் திவ்விய பிரபந்த பாசுரங்களும் இந்த அடிப்படையிலேயே எழுந்தவையாகும்.

"பண்" எனும் பதம் பண்ணுதல் எனும் வினையடியாகப் பிறந்து பெருந்தானமாகிய நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை ஆகிய எட்டினாலும்

கிரியையாகிய எடுத்தல் (ஆரோகணம்), படுத்தல் (அவரோகணம்) நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எட்டினாலும் (அட்டகிரியாம்சம்) பண்ணப்படுதலாற் பண் என்று பெயராயிற்று. "பண்" என்பது நிறைந்த நரம்புள்ளது எனவும் ஏழு ஸ்வரங்களுமுள்ள சம்பூர்ண இராகமெனவும் அழைக்கப்பெறும்.

திருமுறைத் தீந்தமிழ்ப் பாடல்கள் ஏனைய பாடல்களைப் போல அல்லாமல் பண்முறையாகவும், கட்டளை முறையாகவும் நம்முன்னோர் நமக்கு அமைத்து தந்தருளியது நம்முன்னோரால் பெரிதும் போற்றத்தக்கதாகும். இம்முறை, இசைமுறை அல்லது சங்கீத முறை என அழைக்கப்பெறும். இசையுடன் ஓதி அன்பு செலுத்தினால் தான் இறைவன் அருள் செய்வானோ? என்று சிலர் வினவலாம். இறைவன் திருவருளைப் பெறுவதற்கு வழிகள் எண்ணிலவாயினும் அவை எல்லாவற்றிலும் மிக மேலாகக் கொள்ளப்படும் நெறி "இசைச் சாதனமே" என்பது பெரும்பாலார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாகும்.

ஐம்புலன்களையும் அடக்கி மனத்தை இறைவன் பால் வழிபடச் செய்து, மக்கள் இறைவன் அருள் பெறுவதற்கு இசைமுறையே மேலானதென்று கருதியன்றோ நம்மூவர் பெருமக்கள் இறைவன் மீது திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பாக்களைப் பண்முறைப்படுத்தியும், கட்டளை முறைப்படுத்தியும் நமக்கு அமைத்துத் தந்திருக்கிறார்கள். தேவாரச் செந்தமிழ்ப் பனுவல்களின் பல இடங்களிலும் இசையின் சிறப்புப் பற்றி பேசப்படுவதைக் கொண்டு பண்ணிசையின் சிறப்பை நாம் அறியலாம். ஒலி வடிவாகிய நாதத்தை முறையாகவும் கால அளவினதாகவும் அமைத்துப் பாடுவதற்கே "இசைமுறை" எனப்படும் இம்முறை ஒரு மொழிக்கு மாத்திரம் உரித்துடையனவல்ல. பண்முறையில் கண்ட இராகங்கள் சுருதியைச் சேர்ந்தும் அதாவது ஒலி வடிவாகிய சுரங்களைச் சேர்ந்தும், கட்டளைமுறை என்பது கால அளவைச் சேர்ந்தும் அதாவது தாளத்தைச் சேர்ந்தும் இருக்கின்றன.

இக்காலத்தே சங்கீத சம்பந்தமாக வடமொழியில் வழங்கும் ஸ்வரப் பெயர்களாகிய ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனும் ஏழு ஸ்வரங்களும் தமிழில் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்பவற்றிற்குச் சமமானவையாகும். இவற்றிலிருந்து உண்டானவையே பண்களும் திறங்களும் பண்கள் ஏழு சுரங்களோடு கூடிய இராகங்கள். இந்த இராகங்கள் சம்பூர்ண இராகங்கள் எனவும், மேள இராகங்கள் எனவும் வடமொழியில் வழங்கப்பெறும் திறங்கள் பண்களுள் ஒவ்வொன்றிலிருந்தும் உண்டாகிப் பலவகைப்பட்டு வேறுவேறு பெயர் பெற்று வழங்கும். இவை ஏழிற் குறைந்த சுரங்களையுடையனவும் ஜன்னிய இராகங்களெனவும் கூறப்படும். ஏழு சுரங்களாலான இராகங்களை பண்ணியல் என்றும், ஐந்து சுரங்களாலான இராகங்களைத் திறம் என்றும், நான்கு சுரங்களாலான இராகங்களைத் திறத்திறம் என்பதும் மரபாகும். மேலும் தமிழிசை மரபில் கீதத்தில் முதலெடுக்கும் ஸ்வரம் முதல் என்றும், கீதத்தை முடிக்கும் ஸ்வரம் முடிவு எனவும்

வழங்கும். வடமொழி இசையாசிரியர் இராகங்களுக்குக் கூறிய பத்து லட்சணங்களும் தமிழில் முதல், முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு என்னும் ஏழினுள் அடங்கும்.

"நிறை நரம்பிற்கே பண்ணெனலாகும். குறை நரம்பிற்கே திறமெனப்படுமே" என்னும் திவாகரத்தால் பண்ணியல்பும், திறனியல்பும் நன்கு விளங்கும். பண்ணின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக ஓர் குறமகள் குறிஞ்சிப் பண்ணைப்பாட ஓர் யானை தினைக்கதிரை உண்ணாமலும், புடைபெயராமலும் அப்பண்ணைக் கேட்டு மனமுருகி நின்று உறங்கியதென்பது கீழ்வரும் அகப்பாட்டால் அறியக்கிடக்கின்றன.

**"ஒலியல் வார்மலியுளரினன் கொடிச்சி**
**பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாட**
**குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது**
**படா அப்பைங்கண் பாடு பெற்றோய்யென**
**மறம் புகன் மழகளி றுறங்கு நாடன்"**

திருச்சிற்றம்பலத் தேசிகர் என்னும் பெரியார் தமது நாட்டில் பயிர்கள் அழிந்து மக்கள் உணவில்லாமல் வருந்துவதைக் கண்டு தமது பூசையில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணமைந்த திருப்பதிகத்தை ஓதுவிக்கச் செய்தபொழுது உடனே நாட்டில் மழைபெய்யத் தொடங்கித் துன்பத்தை நீக்கியதென்றும், இதனை அறிந்த சேதுபதி வேந்தனொருவன் அவரிடம் நன்றி பாராட்டித் தமது சமஸ்தானத்திலுள்ள வெள்ளக்குளம் போன்ற சில கிராமங்களை அளித்தனனென்றும், அங்ஙனமளித்த காலத்தில் எழுதப்பெற்ற பட்டயம் வாயிலாக அறியக்கிடக்கின்றது. இதிலிருந்து தமிழ்ப்பண்களின் சிறப்பை அறியலாம்.

திருமுறை இசைப்பாடல்களைப் பண்ணோடு பாடினால் அவை கல் மனதையும் கரையச் செய்யும் என்பதற்கு சிறிதளவும் ஐயமில்லை. திருத்தருமபுரத்தில் சம்பந்த சுவாமிகள் பாடியருளிய யாழ்முரி எனும் பண்ணைத் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் தமது யாழில் அமைத்து வாசிக்க இயலாது யாழை உடைக்கச் சென்றமை பண்ணின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எடுத்த இயலும் இசையும் இடையே முறிந்து மாறுபடுமியல்புடையதாய் அமைந்த இசைப்பாடல் முறி (முரி) என அழைக்கப்படும். இத்தகைய முறிப்பாடலாக அமைந்து விளங்குவது "மாதர் மடப்பிடி" எனும் முதற்குறிப்புடைய இத்திருப்பதிகமாகும். "எடுத்த இயலும் இசையும் தம்மின் முறித்துப் பாடுதல் முறியெனப்படுமே" என்பது சிலப்பதிகாரம்.

நன்றி: **இளநங்கை** II
மானிப்பாய் மகளிர் கல்லூரி
வெளியீடு.

# சக்தியின் அருள்

திரு.க. சிவசங்கரநாதன், அவர்கள்
தலைவர், சரசாலை சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலனசபை

சிவமும் சக்தியும் ஒன்றே அதுவே பிரம்மம் ஆனால் சக்தியின் மகத்துவத்தைத்தான் நாம் வெளிப்படையாக பார்க்கிறோம். நமது உடற் சக்தியே நமது தேவைகளைப் பூர்த்தி செய்யப் பெரிதும் உபயோகப்படுகிறது. சக்தி இருந்தால் செய் இல்லாவிட்டால் சிவமே என்று கிட என்பது உடற் சக்தி பற்றிய தா்மதத்துவ விளக்கமாகும். நினைந்து நினைந்து உருகி உள்ளம் ஒருமைப்பட்டு அன்னையை நெஞ்சில் நிறுத்தி வழிபடும் அடியவா்கள் அன்னையின் அருளை எளிதில் பெறுவா். அன்னையின் அருள்பெற்று ஆன்ம ஈடேற்றம் பெற்றோா் எண்ணிக்கை அளப்பரியது. எவா் எதை எதை உள்ளம் நெக்குருகி வழிபட்டுக் கேட்கிறாரோ அவரவா்க்கு அதையெல்லாம் வழங்கி ஆட்கொள்ளும் அன்னையே சக்தியாவாள்.

சீா்காழியில் ஞானசம்பந்தப்பெருமான் அம்மா என்றழைத்த குரல் கேட்டு சிவபெருமான் உடன் வரவந்த உமாதேவியாா் ஞானப்பால் ஊட்டி அருள் வழங்கினாா். ஞானப்பால் உண்டு திருஞானசம்பந்தா் சிவஞானம் பெற்றாா்.

உவமையிலாக் கலைஞானம் உணா்வரிய மெய்ஞ்ஞானம் பெற்ற திருஞானசம்பந்தா் சைவமும் தமிழும் தழைக்க அருள் வாழ்வு வாழ்ந்தாா். புறச் சமய வாதிகளை வாதத்தில் வென்றாா். தேவாரப்பனுவல்கள் பாடித் தமிழைத் தெய்வமொழியாக்கினாா். உமையின் அருளால் அவா் ஊட்டிய ஞானப்பால் பெற்ற திருஞானசம்பந்தா் அருளாளராக வாழ்ந்து தமிழும் சைவமும் வாழ வழி செய்தாா். ஆதி சங்கராின் சௌந்தா்யலகாியில் 75ஆவது பாடலில் பாா்வதி அம்மையே உன்பாலை அருந்திய திராவிடக் குழந்தை பெரும் புலவாிடை எல்லோரும் கவரக்கூடிய கவி ஆகிவிட்டாா் எனக் கூறுகிறாா். காஞ்சிபுரத்தில் 1500 வருடங்கட்கு முன் சீகா் வாழ்ந்தாா். இவா் பிறவியில் ஊமை சக்தியை வழிபட்டாா் அருள்பெற்றாா் அன்னை காமாட்சியைப் போற்றி 500 பாடல்கள் கொண்ட ஸ்ரீமுக பஞ்சதுதி பாடினாா்.

ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முன் திருக்கடவூாில் வாழ்ந்தவா் அபிராமிப்பட்டா். அன்னை அபிராமியிடம் ஆழ்ந்த பற்றும் ஈடுபாடும் கொண்டவா். கோயிலில் தியானத்தில் இருந்த பொழுது திதி கேட்டு அங்கு வந்த சரபோஜி மன்னனிடம் அமாவாசை என்பதற்கு பதிலாகப் பூரணை எனக் கூறினாா். மன்னன் சினந்தான் உறி கட்டிக் கீழே தீ மூட்ட உறியில் இருந்தவாறு அபிராமி அந்தாதி பாடத் தொடங்கினாா் விழிக்கே அருளுண்டு எனத் தொடங்கும் 79ஆவது பாடலைப் பாடும் பொழுது அம்பிகை தோன்றித் தனது தோட்டினை வானத்தில் வீசிப் பூரணைச் சந்திரன் தரும் ஒளியைக்காட்டினாள். மன்னவரும் ஏனையவா்களும் வியந்தனா். தொடா்ந்து பாடல்களைப் பாடி 100 பாட்டுக்களாக அந்தாதியை நிறைவு செய்தாா்.

வங்காளத்தில் கடந்த நூற்றாண்டில் பிறந்த இராமகிருஷ்ணர் தட்சிணேஸ்வரம் காளி கோயிலில் பூசாரியாக இருந்தவர். சாஸ்திர முறைப்படி சக்தி வழிபாடு செய்தவர். யோக முத்தியும் ஞான சித்தியும் பெற்றவர். நினைத்தவுடன் நிர்விகல்ப சமாதி கைவரப்பெற்ற பெருமான் இன்று உலகம் முழுவதும் பரந்து சமுதாயப்பணி செய்து வரும் இராமகிருஷ்ணமிஷன் இவர் சீடர்களால் அமைக்கப்பெற்றது. கல்விப்பணி மருத்துவப்பணி ஆன்மீகப்பணி எனப் பணிபுரியும் இந்த மிஷனின் அருளாளர்கள் சக்தி உபாசர் இராமகிருஷ்ண பரமகம்சர்வழி வந்தவர்கள். தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழ்ந்தவர் வீரைகவிராச பண்டிதர் அன்னை மீனாட்சியின் அருள்பெற்றவர் ஆதிசங்கரர் இயற்றிய சௌந்தர்யலகரியை தமிழில் தந்துள்ளார்.

இந்த நூற்றாண்டில் சக்தி வழிபாட்டைப் பரவலாக மக்களிடையே பரப்பிவருபவர் தமிழ் நாட்டில் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலின் பங்காரு அடிகளார் ஆவார் சக்தி வழிபாடு அனைத்து தர மக்களுக்கும் பொதுவானது என்பதைப் பரப்பி வருகிறார். ஆன்மீகப் பணியுடன் சமுதாயப் பணியும் செய்து வருகிறார். ஈழத்தில் இன்று தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயம் சக்தி வழிபாட்டில் சிறந்து விளங்கி ஆன்மீகப்பணியுடன் சமுதாயப்பணியும் செய்கின்றதை யாரும் மறைக்கவோ மறக்கவோ முடியாது. சக்தி வழிபாட்டில் ஈடுபடும் அருளாளர்கள் காலம் தோறும் தோன்றிச் சக்தி வழிபாட்டின் பெருமையை உயர்த்தினார்கள்.

நாமும் சக்தி வழிபாட்டில் ஈடுபட்டு அருள்பெற்று உயர்வோமாக.

## மானிட வாழ்க்கையின் சிறந்த விதிகள்

உன் சொந்த அலுவல்களைச் சரிவரக் கவனி
எக் காரியத்திலும் தீவிரமாய் இரு
தீர யோசித்து எக்காரியத்தையும் செய்
நியாயத்தையே செய். அநியாயஞ் செய்யாதே
சோதனை காலங்களில் பொறுமையாய் இரு
ஆண்மையுடன், தைரியத்துடன் வாழ்க்கை நடத்து
துன்மார்க்கர்களுடன் சேராதே
சத்தியத்தைக் கடைப்பிடி
பிறரின் கீர்த்தியைத் தொழிலைக் கெடுக்காதே
நல்லாரோடிணங்கு
மனதை எப்போதும் பரிசுத்தமாய் வைத்துக்கொள்
எதற்கும் பொய் சொல்லாதே
கண்டவர் கழுத்திலெல்லாம் சிநேகம் செய்யாதே
வெளி வேஷம் போடாதே
நல்லொழுக்கமுடையவனாய் இரு
கடன்களை உடனுக்குடன் செலுத்து
சிநேகிதரின் யோக்கியத்தை ஏழனம் செய்யாதே
பெற்றோர் சொற் கடவாதே
நஷ்டத்திலும் ஒழுக்கத்தைக் கைவிடாதே
சாவகாச நேரங்களை ஆத்ம விருத்திக்கு பயன்படுத்து.
தீமையைக் கனவிலும் நினையாதே
இச்சைகளை அடக்கு
எல்லோரையும் அன்பாக வரவழை
அதைரியத்திற் கிடங்கொடேல்
நியாயத்திற்கு முற்படு

தொகுப்பு:
**கிருஷ்ணசாமி சுவர்ணா, மானிப்பாய்.**

உ

சிறுவர் விருந்து

# தன்னை அறிவதே தவம்

அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து!

எப்படி இருக்கிறீர்கள்? சுகம் தானே? நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோய் என்பது இருவகைப்படும் ஒன்று உடல் நோய். மற்றது மனநோய். உடல்நோய் வராமல் தடுக்க நல்ல ஆரோக்கியம் பழக்க வழக்கம் உதவும். அதுபோல் மனநோய் வராதிருக்க நல்ல தெளிவான புத்தி, நல்லொழுக்கத்துடன் கூடிய நேரிய வாழ்க்கை முறை உதவும். நேரிய வாழ்க்கைக்கு நல்லவர்களின் உறவும், வழிகாட்டுதலும் வேண்டும். சின்னச் செடிக்கு வலிமையான வேலி அமைந்திருந்தால் அந்தச் செடியை ஆடு, மாடு கடிக்கமுடியாதல்லவா? அதுபோல நல்லவர்கள், பெரியவர்களின் துணையும், அவர்களுடைய நெறிப்படுத்துகையில் அடங்கிய வாழ்வும் நன்கு பாதுகாக்கப்படும். நல்ல நண்பர்களுடன் சேருங்கள்! நல்ல புத்தகங்களை வாசியுங்கள் நல்லவர்களைத் தேடிப் போவது அவர்களுடைய நன்மொழிகளைக் கேட்டுக் கடைப்பிடிக்கப் பழகுங்கள் சரி, இன்றைய கதையைக் கேளுங்கள்.

வேதவியாசரைப் பற்றிப் படித்திருக்கிறீர்கள் தானே? நான்கு வேதங்களையும் முறையாக வகுத்து, பதினெட்டுப் புராணங்களையும் எழுதியவர். மகாபாரதத்தைப் பிள்ளையாரின் உதவியுடன் எழுதி வைத்தவர். மகாபெரிய ஞானப்பொக்கிஷம் வியாசர்! அப்படிப்பட்ட வியாசருக்கு ஒரு மகன் இருந்தான். அவருடைய பெயர் சுகன். பிறவியிலேயே நல்ல விவேகமும் அறிவு முதிர்ச்சியும் பெற்ற சுகன் தன் தகப்பனாரிடமே வேதங்களையும், புராணங்களையும் கேட்டுக் கற்றுக்கொண்டார். என்றாலும், வேதவியாசர் தன் மகனை ஜனகமகாராஜாவிடம் உபதேசம் பெற அனுப்பினார். ஜனகமகாராஜா மிகச் சிறந்த அரசன். அதே சமயம் பற்றறத் துறந்த ஞானி. இப்போ நம்முடைய சுகர் காட்டிலிருந்து புறப்பட்டு விதேக நாட்டுக்குப் போகிறார். செல்வம் கொழிக்கும் ராஜபாதைகளில் ஆசையும் தேவையும் அறியாத சுகர் கைவீசி நடந்து போகிறார்.

வெகு சுதந்திரமாக அரண்மனை வாசலுக்கு வந்தவர், அங்கிருந்த காவற்காரனிடம் கூறினார், “காவலா! வியாச மகரிஷியின் மகன் சுகப்பிரம்மரிஷி வந்திருக்கிறார் என்று அரசனுக்குச் சொல்!”

காவலன் ஓடிப்போய் ஜனகருடைய முன்னிலையில் பணிவாக நின்று கூறினான், “அரசே! வியாச மகரிஷியின் மகன் சுகப்பிரம்மரிஷி தங்களைக்காண வந்திருக்கிறார்.!” ஜனகர் சற்றே தலையசைத்துக் குறுநகை செய்தார்.

“அப்படியா நல்லது! அவருக்கு முன்னும் பின்னும் வந்திருக்கிறவர்களை விட்டுவிட்டுவரச்சொல்” காவலன் ஓடினான் சுகரிடம் சொன்னான்.

"ஐயா! தங்களுடன் முன்னும் பின்னும் வந்திருக்கிறவர்களை விட்டு விட்டு உள்ளே வாருங்கள்!"

சுகர் தனக்கு முன்னும் பின்னும் பார்த்தார். யார் வந்திருக்கிறார்கள்? கொஞ்சம் யோசித்தார். பிறகு "காவலா! சுகப்பிரம்மம் வந்திருக்கிறார் என்று அரசனுக்கு கூறு" என்றார்.

அரசனிடம் ஓடிய காவலன், "அரசே! சுகப்பிரம்மம் வந்திருக்கிறார் என்று சொல்லச் சொன்னார்" என்றான் மீண்டும் நகைத்த ஜனகன்

"இன்னும் இரண்டுபேர் அவரோடு இருக்கிறார்களே! அவர்களை விட்டுவிட்டு வரச்சொல்" என்றார். காவலன் ஓடிச் சொன்னான்.

"ஐயா! இன்னும் இரண்டுபேர் உங்களோடு இருக்கிறார்களாம் அவர்களை விட்டுவிட்டு வரட்டாம்"

சுகர் நன்றாக அடிபட்டுப்போனார் கண்ணீர் வழிய, "சுகன் வந்திருப்பதாகச் சொல்லு" என்றார். காவலன் அப்படியே அரசனிடம் சொன்னான். அரசன் ஜனகன் ஆர்வத்துடன் எழுந்து வந்தான். வாசலில் கண்ணீரோடு நின்ற சுகரை இருகையால் அணைத்து, தந்தைபோல் தழுவி அழைத்துச் சென்றான். அதன்பின் ஜனகனின் அன்பில் கரைந்த சுகர், ஜனகமகாராஜா யாக்ஞிய வல்கியர் போன்ற மகான்களுடன் பலநாள் தங்கியிருந்து பலபரீட்சைகளில் தேறி, ஆத்ம ஞான ஒளியைத் தெளிவாக உரிமை ஆக்கிக் கொண்டார் அது பெரிய கதை.

இப்போ இந்தச் சின்னக்கதை உங்களுக்குத் தெரிவிக்கிற செய்தி என்ன? விளங்குகிறதா?

அகந்தையும், வீண் ஆடம்பரமும் அறிவுக்கு அழகாகாது! வெறும் முகமூடி நிஜமான முகம் ஆகுமா? ஆகவே; பணிவாயிருப்போம். உண்மையாய் இருப்போம்! ஞானத்தின் திறவுகோல் பணிவுதான்.

**நம்மிடம் பிறர் அன்பு செலுத்த வேண்டும் என்று**
**எதிர்பார்த்துக் கொண்டும், ஆனால் அதே காலத்தில்**
**நாம் பிறருக்கு எப்போதும், மனத்தாலும் செயலாலும்**
**தீங்கிழைத்துக் கொண்டும் இருப்போமாயின் ~ அதாவது பிறரை**
**வெறுத்துக் கொண்டும் பகைத்துக் கொண்டும், சாபமிட்டுக்**
**கொண்டிருப்போமாயின் நாம் அழிந்து விடுவோம் என்பதில் ஐயமில்லை.**

**- பாரதியார்**



# கந்தபுராண சிறுவர் அமுதம்

தொடர்-10

- மாதாஜி

## 28. சூரன் முதலியோரின் தோற்றம் :

வியாழபகவான் அசுரரின் கதைகளைக் கூறத்தொடங்குமுன் இறைவனைத் தோத்திரம் செய்தார். எந்த நல்ல காரியத்தையும் தொடங்குமுன்பு, அக்காரியம் விக்கினமின்றி நிறைவேற இறை வழிபாடு வேண்டுமென்பது மரபாகும்.

அசுரேந்திரன் மங்கள் கேசியை மணந்தான். அவர்களுக்கு மாயை பிறந்தாள். அவள் அசுரரின் குரு சுக்கிராச்சாரியாரிடம் கற்க வேண்டிய கல்விகளை முறையாகக் கற்று முடித்தாள். அப்போது சுக்கிராச்சாரியார் மாயையை நோக்கி மாயையே! திருமால் இந்திரன் முனிவர்கள் இவர்களால் அசுரக் குலம் அழிந்து நலிந்து விட்டது. அசுர அரசனும் வலிமை கெட்டு ஒடுங்கி விட்டான். அதனால் நீ பேரழகி வடிவமெடுத்து காசியரை மணந்து அசுரர் குலத்தை பெருகச் செய்வாய் எனப் பணித்தார். மாயை அதற்கு இசைந்தாள்.

சுக்கிரச்சாரியாரிடம் மாயை விடை பெற்றுக் கொண்டு காசியர் மாதவம் செய்யும் வனத்தை வந்தடைந்தாள். அங்கு அவள் அழகிய பூஞ்சோலை நந்தவனத்தை உண்டாக்கினாள். அது அழகாபுரியோ தேவலோகமோவெனக் காணப்பட்டது. மாயை இரத்தின மலையின் உச்சியில் பேரழகுடன் நின்றாள்.

மாயையின் பேரழகைக் கண்ட காசியர் அவள் மீது மீளாக்காதல் கொண்டார். அவளருகில் தயங்கியும் வேகமாயும் சென்றார். அவளை யாரெனக் கேட்டார். "நான் தனிய நிற்கும் போது தவம் செய்யும் நீர் இவ்வாறு கேட்டல் கூடாது. உங்கள் மாதவத்தைச் செய்யப் போம்" என்றாள் மாயை நடிப்புடன்.

முனிவருக்கு காமநோய் தொடர்ந்து வருத்தியது. மாயை கங்கை நீராடப் போவதாகக் கூறி மறைந்து விட்டாள். முனிவரும் பொழுது மறையும் வரை மாயைத் தேடி வருந்தினார். பூரண சந்திரன் உதயமானான். தாமரை மலர்கள் குவிய ஆம்பல்மலர்கள் விரிந்தன.

மீண்டும் மாயை தோன்றினாள் காசியர் மனமகிழ்ந்தார். அவள் முன்னே சென்று "என்னை ஆட்கொள்" என்று வேண்டினார். "மாதவரே என்னுடைய பேரழகுக் கேற்ற வடிவத்தை இப்போது நீர் எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் நான் எடுக்கும் ஒவ்வொரு வடிவத்திற்கும் ஏற்ற வடிவத்தை நீர் எடுத்கொண்டால் நான் உம்மைக் கூடுவேன்" என்று மாயை கூறினாள்.

முனிவர் அதற்கிசைந்தார். ரேரழகு மிக்க இளைஞனாக மாறினார். இந்த அழகைக் கண்டு புன்னகை பூத்தாள். பின்னர் சூரியன் மறைந்த முதல் சாமத்தில் சூரன் பிறந்தான். அவர்களுடைய வேர்வையில் இருந்து பல்லாயிரக்கணக்கான அசுரர்கள் பிறந்தார்கள். பின்னர் இருவரும் இரண்டாம் யாமத்தில் வேறிடம் சென்றார்கள். சிங்க வடிவம் எடுத்தார்கள். அப்போது சிங்கமாசுரனும் பல்லாயிரம் சிங்கமுக அசுரர்களும் பிறந்தார்கள். பின்னர் யானை, ஆடு, மாடு, யாளி, புலி, குதிரை இவ்வாறு பல வடிவங்களை விடியும் வரை தம்பதிகள் எடுத்தனர். லட்சக்கணக்கான அசுரர்கள் தோன்றினார்கள். பொழுது விடிந்ததும் தீக்குறிகள் தோன்றின.

காசிய முனிவரும் மாயையும், சூரியன் உதிக்கவும் பழைய வடிவமெடுத்தார்கள். இரண்டு இலட்சம் மக்களையும் கண்டு மகிழ்ந்தார்கள். காசிபர், புதல்வர்களுக்கு உலக நிலையாமையை விளக்கி இறைவனே உண்மைப் பொருள் என்பதை நிறுத்தும் உபதேசங்களைச் செய்தான். மாயை, அதனைத் தடுத்து மாபெரும் கொடிய யாகம் செய்து சிவபெருமானிடம் தேவர்களை வெல்லவும், 108 யுகங்கள், 1008 அண்டங்கள் ஆளவும் வரம் கேட்கும்படி பணித்தாள். அவ்வாறே அசுரனின் குரு சுக்கிராச் சாரியாரும் பணித்தார்.

அதனால் நீங்கள் வேள்வி செய்யப் புறப்படுங்கள். நான் வேண்டிய ஆயத்தங்கள் செய்து தருகிறேன் என்று கூறினாள் மாயை, பின்னர் பிள்ளைகளே காலத்தைத் தாமதமாக்காது வேள்வி செய்யப் புறப்படுங்கள் என மக்களைத் துரிதப்படுத்தி விட்டு மறைந்து விட்டாள்.

சூரபன்மன் முதலியோர் தாய் தந்தையரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு உத்தர பூமியை நோக்கிப் புறப்பட்டார்கள். மாயை, திரும்பி வந்து “நான் என் பிள்ளைகளைக் காப்பாற்றி அசுரகுலத்திற்கு மேன்மை தேட வேண்டும்” எனக் கூறிச் சென்றாள். காசிபர் அவளைத் தொடர்ந்து புலம்பிக் கொண்டு பின்னே சென்றார்.

காசிபர், மாயையின் பிரிவால் மதிமயங்கினார். கண்ணீர் சொரிந்தார். அப்போது பிரமதேவன் தோன்றினார் மகனே! எல்லா நோயையும் விடக்காம நோய் கொடியது. காமத்தை வென்றவன் உலகை வென்று முத்தியடைவான். மாயை ஓர் வஞ்சகி, நீ அவளுடன் கூடி தேவர்களுக்குத் தீங்கு செய்து விட்டாய் ஒரு பெண் மீது மையல் கொண்டு தவறு அல்ல பெரு தீங்கையே உண்டாக்கி விட்டாய்.

> “உள்ளினும் சுட்டிடும் உணரும் கேள்வியில்
> கொள்ளினும் சுட்டிடும் குறுகிமற்றதைத்
> தள்ளினும் சுட்டிடும் தன்மை ஈதினால்
> கள்ளினும் நொடியது காமத்தீயே”

எனப் பிரமன் கூறியது காசிபர் மீண்டும் காமனை அழித்த சிவனை நினைந்து தவம் செய்யச் சென்றார்.

## 29. வரம் பெற்றான் (சூரனின் தவம்):

சூரன் ஆகியோர் உலகமே நடுங்கும் வடதிசை சென்றான். அப்பொழுது அங்கு அசுரகுரு தோன்றினார். அசுர சேனை வெள்ளத்தைக் கண்டு நடுங்கினார். ஒருவாறு, சூரன் தோன்றினார். சூரனே நீ கடுந்தவம் செய்து இந்திரன் முதலிய அனைவரையும் வெல்ல வேண்டும் என ஆசி கூறினார். சூரன், சுக்கிரச்சாரியாரை வீழ்ந்து வணங்கினான். சூரன், தாங்கள் யாரோ என்று கேட்டான். சுக்கிரச்சாரியார், நான் அசுரகுலக்குரு. உனக்கு மந்திரம் தருகிறேன். நீ யாகம் செய்யும் போது பல கெடுதிகள் உண்டாகலாம், அவைகளை இம் மந்திரம் தடுத்துவிடும் என்று கூறினார்.

இதிலிருந்து நாம் ஓர் உண்மையை அறிகின்றோம் குருவை வணங்க வேண்டும். குருவின் சொற்படி நடக்க வேண்டும். குருவின் மந்திரத்தை தினமும் ஜெபிக்க வேண்டும். அது தீங்குகளை விலக்கிவிடும்.

சூரன், மாதவம் செய்ய வேண்டி முதலில் மனதாலும் நினைக்க முடியாதளவு பதினாயிரம் யோசனை நிலப்பரப்பைச் சுத்தம் செய்தான். மாபெரும் மலைகளினாலே அதனைச் சூழ மதில் கட்டினான். காவலாக காளிகள், கூளிகள், பூதங்கள் முதலியோரைக் காவலாக நிறுத்தினான். தனது மந்திர பலத்தால் வைரவரை அழைத்து ஓமகுண்டத்திற்கு காவல் வைத்தான் ஆயிரம் யோசனை கொண்ட ஆழம், நீளம், அகலத்தில் ஓர் ஓம குண்டம் வெட்டினான். அதனைச் சூழ நூற்றெட்டு ஓம குண்டமும், அதனைச் சூழ ஆயிரத்தெட்டு ஓம குண்டமும் வெட்டினான்.

யாகத்திற்குரிய பொருட்களை மாயை கொண்டு வந்து குவித்தாள். முதலில் 1008 அண்டங்களில் யாக ஓமங்களை சூரன் வளர்த்தான். அக்கினி அணையாது யாகம் செய்யுமாறு தாரகனிடம் பணித்தான். பின்பு 108 யாக குண்டங்களை நெருப்பு மூட்டி யாகப் பொருட்களைச் சொரிந்து வானளவ ஓமம் வளர்த்து, அக்கினி அணையாது யாகம் செய்யும்படி சூரன் சிங்கமா சூரனிடம் பணித்து விட்டு, நடுவில் இருந்த ஓம குண்டத்தை சூரபன்மன் அடைந்தான். 1008 குண்டங்கள், 108 குண்டங்கள் தோறும் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து அக்னி வானளவ எரிந்து கொண்டு இருந்து.

சிவபெருமானைத் தியானித்தபடி நடுவே இருந்த ஓம குண்டத்தில் யாகம் வளர்க்கத் தொடங்கினான். அவி முதலியன சொரிந்தான். விறகு சமித்திகளை அடுக்க முன் ஓமகுண்ட நடுவில் மிகவும் கூரான இரும்பாணியை ஊன்றினான். மாயை என்பவளும், மற்றைய அசுரர்களும் ஆகாயத்தில் இருந்து மாமிச வகைகளை ஓம குண்டங்கள் தோறும் சொரிந்தனர்.

ஓம குண்டம் வானளவ வளர்ந்து கொண்டே இருந்தது. எட்டுத்திக்குகளையும் சுட்டது. சிவபெருமான் அருள்செய்ய வரவில்லை. சூரபன்மன் இரும்பு கமுகு மரத்திலிருந்து

தசைகளை வெட்டி அக்கினியுள் இட்டான். பிரயோசனமில்லை அப்படியே அக்கினியுள் வீழ்ந்து சாம்பலாகி விட்டான்.

இதனைத் தம்பியாகி சிங்கமாசூரன் தாரகன் கண்டார்கள். சகோதர பாசம் உந்தித் தள்ள தாமும் அக்கினியுள் வீழ்ந்திறக்க ஆயத்தமானார்கள். அப்போது எம்பெருமான், அசுரர்களின் சகோதர வாஞ்சையை மெச்சினார். மனம் இரங்கி வயோதிபர் போன்று சிங்கமுகா சூரன் தாரகன் முன் வந்து அவர்களை மரணிக்காதவாறு தடை செய்தார். எங்கள் அண்ணன் சூரபன்மன் உயிர்பெற்று எழுந்தால், நாம் மரணிக்க மாட்டோமெனத் தம்பிமார் கூறினார்கள். சிவபெருமானாகிய வயோதிபர் சூரபன்மனை உயிர்பெற்று முன்போல எழ அனுக்கிரகம் செய்தார்.

பின்னர் சிவபெருமான் சூரபன்மனை நோக்கி, நீ நீண்ட காலம் தவம்செய்து இளைத்து விட்டாய். அதனால் உமக்கு வேண்டிய வரம் யாது? கேள் என அருள் புரிந்தார். சூரபன்மனின் அசுரகுணம் மேலிட்டுக் கொண்டே இருந்தது. தாயாகிய மாயையின் உட்கருத்தை மனதில் சூரபன்மன் நினைத்தான். எம்பெருமானை வீழ்ந்து வணங்கினான். "எம்பெருமானே! இந்த மண்ணுலகத்தில் உள்ள அண்டங்களையும் ஆளவேண்டும் அந்த அண்டங்களுக்கு நினைத்தவுடன் சென்று திரும்பும் ஊர்தியும், எப்பொழுதும் யாராலும் அழியா வரமும் வேண்டும். திருமால், இந்திரன் முதலியோரை வெல்லக்கூடிய ஆயுதங்களும் தரவேண்டுமென வேண்டினான்."

அவ்வாறு சூரபன்மனுக்கும் தம்பியர்க்கும் கேட்ட வரங்களை அருளினார். 1008 அண்டங்களையும் 108 யுகங்களில் தேவர்களையெல்லாம் போரில் வென்று ஆளக்கடவாய், எனது சக்தியால் பெற்ற இவ்வரங்களை அபாவனை செய்தால், எனது சக்தியால் உன்குலம் நாசமாகுமென அருளிச் சிவபெருமான் மறைந்தார்.

பின்னர், சூரபன்மன் தனது பல்லாயிரச் சூரசேனைகளுடன் தனது தந்தையாகிய காசிபரை அடைந்தான். காசிபரை வணங்கி இனிநாம் என்ன செய்வது எனக்கேட்டான். நீங்கள் செய்வது என்னவென்று உமது குருவிடம் கேள் என்று பணித்தார் காசிபர். சூரபன்மன் தனது குலகுருவிடம் சென்று குருவை வணங்கினான். சுக்கிரச்சாரியார், நீ கடுந்தவம் இருந்து சிவபெருமானிடம் அற்புதமான வரங்களைப் பெற்றுவிட்டீர். ஆகையால் நீரே பிரமம். இந்திரகுலம் அழிந்தது. போர் செய்து அவனுடைய செல்வங்களைப் பறிப்பாயெனப் பலகெடுமதியான புத்திமதிகளைச் சூரன் முதலியோருக்குப் புகட்டினான்.

தக்கன் சிவத்துரோகம் செய்து யாகம் செய்தான். திருமாலைத் தலைவனாக வைத்தான். தக்கனுக்குப் பயந்து இந்திரன் முதலான எல்லாத் தேவர்களும் தக்கன் யாகத்தில் கலந்து கொண்டனர். இப்போது அதன் பலனாக சூரனின் ஆட்சியினால் வருந்துகின்றார்கள்.

உ



# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

முதுபெரும்புலவர், கலாபூஷணம்,

**ஆசிரியர் வை. க. சிற்றம்பலம், அவர்கள்**

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரென்றால் இலங்கையிலன்றி இந்தியாவில் தமிழ் நாட்டிலும் அறியாத தமிழருமுளரோ. அவ்வாறு பெரும் புகழ் பெற்ற சைவப்பெரியார் கல்விமான் அவர். நல்லூரிலே புகழ்பூத்த கல்விக் குடும்பத்திலே உத்தம வேளாளரான தமிழறிஞர் கந்தப்பிள்ளையும் அவர் பத்தினியார் சிவகாமிப்பிள்ளைக்கும் நான்காம் மகனாக அவதரித்தவர். நிரம்பிய சிவபக்தியும் முருகபக்தியுமுடையவர். ஆரம்பத்திலே நல்லூர் சரவணமுத்துப் புலவரிடமும் இருபாலைச் சேனாதி ராசரிடமும் தமிழ்க்கல்வியன்றி வடமொழிக்கல்வியையும் கற்ற நாவலர் ஆங்கிலக் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் கிறீத்தவக் கல்லூரியிலும் கற்றுக்கொண்டார். அக்கல்லூரியில் படிக்கும் சைவ மாணவர்கள் கிறீத்தவ ஆசிரியரால் பரிகசித்தும் புறக்கணித்தும் வருவதைக் கண்ட நாவலர் அந்தச் சின்ன வயதிலேயே அதற்கொரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென உறுதியாக எண்ணிவிட்டார். நாவலர் தமிழிலன்றி ஆங்கிலத்திலும் விற்பன்னராக இருத்தலைக் கண்ட அக்கல்லூரி யதிபராயிருந்த பார்சிவல் பாதிரியார், நாவலரை அக்கல்லூரியில் ஆசிரியராய் நியமித்தார். இருவரும் ஒருவருக்கொருவர் ஆசிரியராய் ஆங்கிலத்தையும் தமிழையும் கற்கையில் ஈடுபட்டனர். இச்சந்தர்ப்ப காலத்திலேயே பாதிரியார் நாவலரைக் கொண்டே கிறீத்தவ வேதம் என்னும் பைபிளை, மொழிபெயர்ப்பித்தார். அதன் பின், நாவலர் தமது சைவப்பிள்ளைகளை, கிறீத்தவர்கள் மதமாற்றஞ் செய்து வருவதனை நன்கறிந்து அக்கல்லூரியில் தமது ஆசிரியப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். சிவபிரானது திருவருளால் நாவலர் எந்த நூலையும் ஒருமுறை கற்ற பொழுதே அந்நூல் அவர்களுக்குத் துலாம்பரமாக விளங்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அதனால் அவர் பல தமிழ் இலக்கண இலக்கிய தர்க்க நூல்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் அந்தச் சின்ன வயதிலேயே கற்று முடித்து விட்டார். நல்லூர் முருகனிடம் நிரம்பிய பக்தியுடைய அவர் ஆகமவிதிப்படி, அக்கோயில் அமைப்பும் நடைமுறையும் பரிபாலனமும் இல்லாதிருக்கக் கண்டு அங்கிருந்தும் நீங்கி வண்ணார்பண்ணையை அடைந்தார்.

அவர் தன் முதற்கடமையாக மதமாற்றத்தைக் கண்டித்தும் பிரசாரம் செய்தார். சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம் என்பவற்றின் சிறப்பை யெல்லாம் மக்களுக்கு விரித்துரைத்தார். தனது தொண்டுகளைச் செய்வதற்கு வண்ணைச் சிவன்கோயிலை நன்கு பயன்படுத்தினார். சிவன்கோயில் முகாமையாளராயிருந்த செட்டியார்கள், நாவலரின் தொண்டையேற்று அக் கோயிலில் சைவப்பிரசங்கஞ் செய்ய அவரை அனுவதித்தார்கள். 1947இல் தமது 25ஆம் வயதில் முதற் பிரசங்கத்தை செய்தார். சிவதூஷண கண்டனங்களை

நூல் மூலமும் துண்டுப்பிரசுரமூலம் சொற்பொழிவு மூலமும் எதிர்த்தார்.

அக்காலத்தில் அவசரமாகச் செய்ய வேண்டிய சைவவினாவிடையை அச்சிட்டு விநியோகித்தார். பெரிய புராணம் முதலான சைவப்புராணங்களை செய் யுளிலன்றி வசனத்திலும் வெளியிட்டார். மனிதன் தனது பகுத்தறிவினால் நீதிவழி நடந்து உய்யும் பொருட்டு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழிநூல்களை, சைவப்பிள்ளைகள் இளமையிலேயே மனனம் பண்ணிக் கற்க வேண்டும் என்னும் விருப்பால் அச்சிட்டு விநியோகித்தார். திருக்குறள், நாலடியாரையும் பதிப்பித்தார். அவையன்றி நன்னூல், இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடைகளையும் பதிப் பித்து வெளியிட்டார். இதனால் யாழ்ப்பாண மெல்லாவூர்களிலிருந்தும் பல பெரியோர் களும், மக்களும் அவரைச் சூழ வந்தனர். இலக்கணக்கொத்து பிரயோகவிவேகம் சேனாவரை தருக்கம் ஆகியவற்றையும் கூடப்பதிப்பித்தாரென்றால் என்னே அவரது அறிவாற்றல்! இவையன்றி சிவஞான போதம், சித்தியார் முதலிய சித்தாந்த நூல்களையும் பன்னிரு திருமுறை களையுங் கூடப் பதிப்பித்து வெளியிட்டார்.

நாவலர் பெருமான் தமது 32 வயதுக் கிடையிலேயே இவற்றை யெல்லாஞ் செய்து முடித்தாரென்றால் அதற்குக் காரணம் அவரது உள்ளத் தூய்மையும் இளகிய சிவப்பற்றுமென்பதில் சந்தேகமில்லை மேலும், சைவத்துக்காக யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலுஞ் சென்று சைவப் பிரசங்கம் செய்த நாவலர் அவர்கள் பல சைவப்பள்ளிக்கூடங் களையும் அத்திபாரமிட்டுத் தொடக்கினார். 1848இல் வண்ணையில் சைவப் பாட சாலையொன்றை கட்டிவிட்டார். இணுவில், கோப்பாய்ப் பள்ளிக்கூடங்கள் அதிபிரசித்த மானவை.

சைவக்கல்வியும் தமிழ்க்கல்வியும் மாணவர்களுக்கு கற்பிக்கும் முகமாக பல ஆசாரமுள்ளவரை வருவித்துத் தாமே அவருக்குக் கற்பித்தார். அப்படிக் கற்றவருள், மட்டுவில், ம. க. வேற்பிள்ளை, இணுவில் நடராசையர், அம்பிகைபாகர், நாவலர் மருகர் பொன்னம்பலம் முதன்மையானவர்கள். தமிழ் நாட்டிலும் பலர் நாவலர் பெருமானுக்கு மாணவ ராயினர். அக்காலம் தம்மால் தாபிக் கப்பெற்ற சைவப்பிரகாச வித்தியாலயத் துக்கு தலைமை ஆசிரியராக, குப்பிளான் பிரம்மஸ்ரீ செந்திநாதையரை நியமித்தார். சைவசித்தாந்தம் படிப்பிக்கும் ஆசிரியராக இணுவில் நடராசையரை நியமித்தார். இந்தளவோடு நில்லாமல், சைவமாணவர் களுக்கு உணவு, உடை, படுக்கை என்பவற்றை இலவசமாகக் கொடுத்து அவர்கள் மூலம் சைவத்தையும் தமிழையும் கற்பிக்கும் நோக்கில் தாம் கட்டிய சைவப்பிரகாசவித்தியாலயத்தின் பக்கலில் ஒரு கனதியான, விசாலமான, உயர்ந்த இரும்புத் தூணாலமைந்த காவிய பாடசாலையொன்றையும் அமைத்து விட்டார். பல மாணவர்கள் இப்பாட சாலையை அவரின் தமையனார் மகன் சைவப்பெரியார் திரு. த. கைலாயபிள்ளை அவர்களும் அவரின் மருமகன் முறைபூண்ட மகாவித்துவான் நல்லூர் பொன்னம்பலம் பிள்ளையும் ஆசிரியராகவிருந்து நடாத்தி வந்தார்கள் அங்கே அவர்களிடம் படித்து உயர்ந்த ஒருவரே மட்டுவிலூர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையாவர்.

நாவலர் அவர்கள் சைவத்தமிழ் பரப்புவதற்காக முதல் சிதம்பரத்தில்

வித்தியானுபாலன அச்சகத்தையும் யாழ். வண்ணார் பண்ணையில் ஒரு அச்சகத் தையும் நிறுவினார். தமிழையும், சைவத்தை யும் வளர்ப்பதற்காக அவர்செய்யும் அரிய பெரிய சேவையை அறிந்து தண்டமிழ் நாட்டில் சைவத்தை வளர்க்கும் தலை சிறந்ததாகிய திருவாவடுதுறை ஆதீனத்து மகாசந்நிதானச் சுவாமிகள் 1849 இல் அவரைஅழைத்து தமது ஆதீன மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மூலம் அதி உயர்ந்த நாவலர் என்னும் பட்டத் தைச் சூட்டி கௌரவித்தார். அதைத் தொடர்ந்து வேறும்பல சைவ ஆதீனங் களும் அவரை அழைத்து உபசாரஞ் செய்தன. நாவலர் பெருமான் சிதம்பரம் நடராசப்பெருமான் மீதும் தேவி சிவகாமி அம்மை மீதும் தனிப்பெரும் பக்தியுடைய வராயிருந்தார். தில்லை வாழ் அந்தணர் பாலும் அவ்வாறு பெருமதிப்புடையவரா யிருந்தார். திருத் தொண்டரிலும், அத்திருத் தொண்டர் பெரிய புராணத்திலும், அதை இயற்றிய பேரன்பர் சேக்கிழார் சுவாமி களிடத்திலும் பெருமதிப்பு வைத்திருந்தார்.

இப்புராணம் பெருங்காப்பிய இலக் கணமுற்றும் அமைய இயற்றப் பெற்ற புராணமாகும். அதில், நாடு, நகரம், ஆறு முதலியனவன்றி நாயனார் வரலாறு களையும் அளவாக பக்தியாக சைவம் கமழத்தக்கதாக தேவையற்ற வர்ணனை களின்றி பாடி முடித்திருக்கிறார். சந்தான சாரியாருளொருவராகிய உமாபதி சிவாச் சாரியார் அவரைப் புகழ்ந்து பாராட்டிப் புராணமாகப் பாடினாரென்றால் அச் சேக்கிழாரின் பெருமையை அறிஞர்கள் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

இப்படியான சேக்கிழார் சுவாமிக்கு சிதம்பரத்திலேயே ஒரு கோயில் கட்டவேண்டும் என்று நினைத்தார். காலஞ் சென்றாலும் இப்பெரியார் கைங்கரியத்தை வருங்காலச் சைவச்சந்ததியினர் யாராவது கட்டினால் நல்லதெனவும் கூறிவைத்தார். அவரது எண்ணம் வீண் போகவில்லை. சென்ற 2000ஆம் ஆண்டு சிதம்பரத்தில் சேக்கிழார் நாயனார் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்ததாக இந்துசாதனப் பத்திரிகை மூலமறிந்தேன்.

தாமில்லாக்காலம் சைவம், தமிழ் என்பனவும் நம் மக்களும் என்னதான் செய்வார்களோ, என்று மனக்கவலை யடைந்த நாவலர் பெருமானுக்கு வாய்த்த ஒரு மேதாவியாகவே சேர். பொன்னம்பலம் இராமநாதன் நாவலர் கண்ணில் தென் பட்டார். திரு. இராமநாதன் நாவலர் தொண்டை முன்னரே அறிந்திருந்தபடியால் அவரை ஒரு முறை சென்று சந்தித்தார். அவரைக் கண்ட நாவலர் மிக மகிழ்ச்சி யடைந்தார். யாழ்ப்பாணச் சமயநிலை சைவர் நிலை, தமிழ்நிலை மதம்மாற்றம் என்பவை பற்றி கலந்துரையாடி எமது விஷயங்களை இந்த ஆங்கில அரசுக்கு கொழும்பில் சென்று உணர்த்துதற்கு நீரே தகுதியுடையீர் எமது சனப்பிரதிநிதியாக நீர் செல்லவேண்டும் தமிழ் சைவம் இரண்டையுமன்றி எம்மக்கள் ஆங் கிலத்திலும் முன்றேறுதல் உமது கையி லேயே இருக்கிறது. ஆதலால் எமது சிவபிரான் உமக்கு வேண்டிய துணை புரிவார் என்று சொல்லி அவரை வாழ்த்தி ஆசீர்வதித்தார். அவரது உபதேசம் பெற்ற இராமநாதன் அவர்கள் தன்னாலாகிய தொண்டெல்லாம் செய்து 33இல் கார்த் திகை மாதத்திலேயே சமாதி அடைந்தார்.

நாவலர் சொல்லை தொண்டை சிரமேற் கொண்டு இலங்கையிலன்றி இந்தியாவிலும்பல சைவ அறிஞர்கள் தோன்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள்.

**ஏட்டுத்தமிழ்:**

நாவலர் பெருமானுக்கு முன்னமே இங்கேயன்றித் தமிழ் நாட்டிலுமிருந்த புலவர்கள் நமக்குத் தேவையான தமிழ் நூல்களை பனை ஓலைச் சுவடிகளிலேயே எழுதிவைத்தார்கள். எழுத்தாணியால் எழுதும் போது, குற்றெழுத்துக்களுக்கு குற்றுப் போடாமலும், ர, எழுத்துக்களுக்கு கால் இழுக்காமலும் முடிப்பிசைக் குறிக்கு முதலாம் குறியீடுகளில்லாமலும் எழுதி வைத்தார்கள் ஏட்டில் சைவத் தமிழ் நூலெல்லாம் இவ்வாறிருக்கக் கண்ட நாவலர் அவர்கள் அவற்றைத் திருத்தி குற் றெழுத்துக்களுக்கு குற்றிட்டும் அரவுக்கு காலிழுத்தும் தேவையான இடங்களில் ஏற்ற ஏற்ற குறியீடுகளிட்டும் அச்சேற்றி னார்கள்.

இவ்விஷயத்தை நான் கூறவில்லை யாழ்ப்பாணத்துக்கு 2001இல் விசயம் செய்த சேக்கிழார் அடிப்பொடியென்னும் இராமச்சந்திரனே, வெளியிட்டுப் பெரு மையாக நாவலரை வியந்தார்.

நாவலரின் முன் தமிழில் கட்டுரைகள் பலவற்றை பலரெழுதியிருந்தாலும் நாவலர் பெருமானின் கட்டுரை புதுமையான அழகான நடைகொண்டிருந்தது. அந்த நடையையே தமிழ் நாட்டவரும் நமது நாட்டவரும் பின்பற்றினர்கள். கட்டுரையின் சிறப்பு நடைபற்றி இரு நாட்டவரும் நாவலரைப் புகழ்ந்துள்ளார்கள். அவரது தமிழ் நடையை வியந்தும் புகழ்ந்தும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் "வசன நடை கைவந்த வல்லாளன்" எனப்பாராட்டி யுள்ளார். பாடியுமுள்ளார். மௌனதவமுனி பொ. கைலாசபதி B. Sc. அவர்கள் நாவலரின் அரிய தன்னல மற்ற தொண்டின் சிறப்பால்

நாவலரைப் போல் நமக்கு ஆளில்லை

என்று பாடியுள்ளார்.

தமிழ் நாட்டுப் புலவர் பலர் நாவ லரைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அவருள் சுந்தானந்தபாரதியார் பாடிய பாடல்கள் சில:

1. நாவலரென்கையிலே, நாவெல்லாந் தேனூறும்
ஜீவ மலரினிலே கிளியே சிவம்வந்து தித்திக்குமே.

2. ஆழக்கடலைப்போல அறிவுக் கடலுடையார்
ஈழத்துச் சிங்கமெடி கிளியே, இலக்கியச் சுரங்கமெடி.

3. பைந்தமிழ் வியாசரவர், பசுபதி நேசனவர்
ஐந்தாங் குரவரெடி கிளியே, ஆறாவ தாராரோ?

1879இல் கார்த்திகை மாசத்தில் மக நட்சத்திரத்தில் சிவபதப்பேறெய்திய நாவலரைப் பற்றி பாராட்டியும், உரைத்தும் எழுதியும் பின்பற்றி வாழ்ந்தவர்களுள் மட்டுவில், பண்டிதமணி குறிப்பிடத்தக்கவர்.

நாவலரின் சிவபதப்பேறு குறித்து நீர்வேலிச் சிவசம்புப் புலவர் தமது உள்ளக்கிடக்கையை வெளியிட்டுப் பாடிய பாட்டு:

"ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநாவ லனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே"

என்று வருந்திப் பாடியுள்ளார்.


நாவலர் பெருமானது நினைவினை யாவரும் அறிந்து கொள்ளுமாறு அவரது குருபூசைத் தினத்தில் அவரைப்பற்றி பாராட்டி பூசை செய்து வழிபடுதல் நமது கடமையல்லவா! வாழ்க நாவலரது நாமம்; வளர்க அவரது புகழ்.

**வணக்கம்**

22-12-2003 தினகரன் பத்திரிகையில் வெளிவந்த
"அருள்ஒளி" பற்றிய நோக்கினை மீள் பிரசுரம் செய்கிறோம்.

(ஆ+ ா)

★ ஒரு நோக்கு....




இலங்கை - வடபகுதி தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வெளியீடான அருள் ஒளி சஞ்சிகை கார்த்திகை மாத இதழ் மலர் 16 வெளியாகியுள்ளது.

அல்லல் அகற்றி ஆனந்த வாழ்வளிக்கும் வேழமுகன் முன் அட்டையை அலங்கரிக்கப் பின் அட்டையை தில்லைக் கூத்தன் அலங்கரிக்க ஆக்கங்கள் பலவற்றை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. நூலின் ஆசிரியராக செஞ்சொற் செல்வர் திரு. ஆறுதிருமுருகனும் உதவி ஆசிரியராக சைவத்திரு கா. சிவபாலனும் கடமையாற்றுகின்றனர்.


'பாடத் திட்டத்தில் ஆன்மீகக் கல்வி' என்ற தலைப்பில் ஆசிரியர் கட்டுரை ஒன்றை வரைந்துள்ளார். மற்றும் 'சமயம் அறத்தின் வழியது' என்ற தலைப்பில் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் 'மலர் வழிபாடு, பண்பாட்டின் உயர்வாக...' என்ற தலைப்பில் திரு. ஆ. கதிரமலைநாதன், 'திருவிளையாடற் புராணம்' என்ற தலைப்பில் சிவ. சண்முகவடிவேல்', 'கந்தபுராண சிறுவர் அமுதம்' என்ற தலைப்பில் மாதாஜி, 'வைத்தியரின் தருமம்' என்ற தலைப்பில் அருட்சகோதரி யதீஸ்வரி, 'சமய வாழ்க்கையின் முக்கிய அம்சம்' பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் 'குமாராலய தீபம்' என்ற தலைப்பில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி., 'இருள் நீக்கும் மணிச்சுடர்' என்ற தலைப்பில் திருமதி சகிதேவி கத்தையா ஆகியோரின் பயனுள்ள கட்டுரைகளையும், உள்ளடக்கி ஆன்மீக ஈடேற்றத்திற்கு அரிய பொக்கிஷமாக அருள் ஒளி வெளிவந்துள்ளது, படித்து பயன் பெறுவோமாக.


- கனகா

என்னதான் வாழ்க்கை வசதிகள் பெருகினாலும் பழைய பண்பாட்டின் சுகம் வரவே வராது. போலித்தனமான நாகரிகத்தின் உச்சக் கட்டமே கலியுகத்தின் முடிவாக இருந்தால் கூட யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

- கண்ணதாசன்


சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி
சிறப்பு நூல் வெளியீடு
07—01—2008





# பசுவைப் பேணுவோம்

PILLAIYAR PRESS, NALLUR.